பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 22 வியாழக்கிழமை (07-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:252

# லண்டன் விஸாவுக்கான புதிய நடைமுறை

# எதிர்க் கட்சிகள் ஏகோபித்த கண்டனம்

## நாடாளுமன்றத்தில் அமளி துமளி

யாழ்ப்பாணம்,ஓகஸ்ட் 7

**பிரிட்டனுக்குச் செல்லும் இலங்கையர்களுக்கு விஸா வழங்குவதில் கடைப் பிடிக்கப்படும் புதிய நடைமுறைகளை எதிர்க்கட்சிகள் கடுமையாகக் கண் டித்திருக்கின்றன. இந்த விவகாரம் நேற்று நாடாளுமன்றத்தில் பெரும் அமளி துமளியை ஏற்படுத்தியது.**

பிரிட்டனுக்கு விஸா விண்ணப்பிப் பவர்களிடம் கைரேகை பெறுவது தொடர்பான சர்ச்சையினால் நாடாளு மன்றம் கூச்சலும் குழப்பமுமாக இருந் தது. சபாநாயகரின் தீர்ப்பை விமர் சிக்க முற்பட்டதால் சபை அமர்வு களும் அரை மணிநேரம் ஒத்திவைக் கப்பட்டன.

ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் கடுமையான சொற்போர் நடந்தது.

சபையில் அமைதியை ஏற்படுத்த சபாநாயகர் மேற்கொண்ட முயற்சி கள் அனைத்தும் தோல்வி கண்டன.

இதனால், சபையின் இருபக்க உறுப்பினர்களும் சபாநாயகரின் வன் மையான கண்டனத்துக்கு உள்ளாகி னர். ஆளும் கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் சபாநாயகர்களாக செயற் பட்டால் நான் என்ன செய்வது? என்று ஒரு கட்டத்தில் சபாநாயகர் எச்சரித்தார்.

பிரிட்டன் செல்லும் இலங்கையர் கள் எல்லோரும் கிரிமினல்களா? அல் லது பயங்கரவாதிகளா? தூதரகத்தில் எம்மிடம் மட்டும் விரல் அடையாளங் களைப் பெறுவது ஏன்? இது சர்வ தேச மட்டத்தில் இலங்கையர்கள் தீண்டத்தகாதவர்கள் என அடையாள

(14ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில்

## கண்ணிவெடி அகற்றும் பணிக்கு தெற்கிலிருந்து 40 இளைஞர்கள்

கொழும்பு,ஓக.7

வடக்கு - கிழக்கு மாகாணங்க ளில் கண்ணிவெடி அகற்றும் பணி களில் தென்பகுதி இளைஞர்களும் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இராணுவ சிப்பாய்களுடன் தென் பகுதி இளைஞர்கள் 40 பேரும் வெகு விரைவில் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்காக வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பிவைக்கப் படுவர்.

தென்பகுதி இளைஞர்கள் இவ் வாறான பணிகளில் ஈடுபடுத்தப்படு வது இதுவே முதல் தடவை என் பதும் குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது இந்தியாவிலிருந்து இங்கு வந்துள்ள கண்ணிவெடி அகற் றும் நிபுணர்கள் இந்த இளைஞர் களுக்கு கண்ணிவெடி அகற்றும் பயிற் சிகளையும் தந்திரோபாயங்களையும் வழங்கி வருகின்றனர்.

இவ்வாறு பயிற்றப்படுபவர்கள் காலப்போக்கில் கண்ணிவெடி அகற் றும் நிபுணத்துவம் பெற்றவர்களாக விளங்குவர் என அரசாங்க செய்திக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மூவின மீனவர்களும் திருமலையில் பேரணி!

திருகோணமலை,ஓக.7

திருகோணமலையில் நேற்றுக் காலை மீனவர்கள் பெரும் கண்ட னப் பேரணி ஒன்றை நடத்தினர். மாவட்டத்தின் பல்வேறு மீனவக் கிராமங்களையும் சேர்ந்த மூவின மீன வர்களும் பேரணியில் பங்கு கொண் டனர். உட்துறை வீதியிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தைப் பேரணி சென்ற டைந்த பின்னர் கண்காணிப்புக் குழு வினரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

சட்டவிரோத மீன்பிடித் தொழில் களைக் கண்டித்தும், அவற்றை நிறுத் தக் கோரியும் திருகோணமலை மாவட்ட தமிழ் மீனவர் அபிவிருத்தி அமையம் ஏனைய மீனவ சங்கங்களு டன் இணைந்து இப்பேரணியை ஒழுங்குசெய்திருந்தது. பேரணியில் 500இற்கு மேற்பட்டோர் கலந்துகொண் டனர்.

வெடிபொருள்களையும், தடுக்கப் பட்ட வலைகளையும் பயன்படுத்தி மீன்பிடிப்பதால் கடலில் மீனினம் அழிந்து தாங்கள் தொழில் இழக்கும் ஆபத்து இருப்பதை பேரணியில் சென்றோர் சுலோக அட்டைகளில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

திருகோணமலை என்.சி.வீதியில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## சரசாலை தெற்கில் மிதிவெடி! நேற்று மூன்று பேர் படுகாயம்!!

### ஒருவர் இரண்டு பாதங்களையும் இழந்தார்

தென்மராட்சி,ஓக.7

சாவகச்சேரி சரசாலை தெற்குப் பகுதியில் நேற்று இடம்பெற்ற ஒரு நிலக்கண்ணி வெடிப்புச் சம்பவத்தில் மூவர் காயமடைந்திருக்கின்றனர். இவர்களில் ஒருவர் தனது இரண்டு பாதங்களையும் இழந்துள்ளார்.

சரசாலை தெற்கு, மட்டுவில் கமலா சினி வித்தியாலயத்துக்கு அண்மை யில் காலை 10 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

வளவு ஒன்றில் துப்புரவுப் பணி யில் ஈடுபட்டிருந்த சரசாலை தெற் கைச் சேர்ந்த செ.சபாநாயகம்(வயது 45) என்பவர் அங்கு புதைக்கப்பட்டி ருந்த மிதிவெடியில் சிக்கினார். அவ ரது இரண்டு கால்களின் பாதங்களும் சிதறின. அவருக்கு அருகே நின்றி ருந்த மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி பரராஜசிங்கம் (வ.பது 57), மட்டுவில் வடக்கைச் சேர்ந்த செல்லத்துரை தெய்வேந்திரம்(வயது 44) இருவரும் கண்ணிவெடிச் சிதறல் களால் காயங்களுக்கு உள்ளாகினர். இவர்களில் ஒருவருக்கு கண்ணிலும் காயம் ஏற்பட்டது.

காயமடைந்த மூவரும் உடனடி யாக சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பின்னர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கட்டாய மதமாற்றத்துக்கு எதிராக கடும் நடவழக்கை எடுக்கப்படும்!

### நீதி அமைச்சர் லொக்குபண்டார எச்சரிக்கை

கொழும்பு,ஓக.7

கட்டாய மத மாற்றம் ஒரு சட்ட விரோதமான செயலாகும். தவறான வழியில் பிரசாரங்களை மேற்கொண்டு அப்பாவி மக்களை மதமாற்றம் செய்ய முனைபவர்களுக்கும் அவர்களுக்கு உதவும் அமைப்புகளுக்கும் எதிரா கக் கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும் இதை ஊர்ஜிதப்படுத்தி உள்ளது. உயர் நீதிமன்றத்தின் இத்தீர்ப்பை நாம் கௌரவத்துடன் ஏற்றுக்கொள் கிறோம்.

- இப்படிக் கூறினார் நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் டபிள்யூ.ஜே. எம். லொக்குபண்டார.

அமைச்சர் லொக்குபண்டார நாடாளுமன்றத்தில் சபை முதல்வ ரின் அலுவலகத்தில் நடத்திய செய்தி யாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதா வது:-

எந்த் ஒரு தனிநபரும் எந்த ஒரு மதத்தையும் பின்பற்றவும், வழிபடவும் உரிமை உண்டு. ஆனால், மதம் தொடர்பாக பிரசாரம் மேற்கொள்ள முடியாது. இது அரசமைப்பில் திட்ட வட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, பௌத்தமதம் தேசிய மதம், அதேபோன்று ஏனைய மதங்களுக்கும் உரிய அந்தஸ்தும் கௌரவமும் பாதுகாக்கப்படவேண்டும் எனவும் அரசமைப்பில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

ஆனால், சில அரசசார்பற்ற நிறு வனங்களும், அமைப்புகளும் இதை உணரவில்லை - வறுமைப்பட்ட குடும் பங்களையும் அகதி முகாம்களிலும் கஷ்டநிலையில் வாழும் குடும்பங் களையும் அணுகும் இவர்கள், பால்மா மற்றும் உணவுப் பொருள்கள், பணம் ஆகியவற்றைக் கொடுத்து மதமாற்றம் செய்துவருகின்றனர்.

அதேவேளை, அநாதை விடுதி களை நடத்துகிறோம், கன்னியர் மடங்களை நடத்துகிறோம், உங்கள் பிள்ளைகளை வளர்க்கிறோம் என்று ஏமாற்றி உத்தரவாதம் அளித்து மத மாற்றம் செய்கின்றனர்.

மலையகத்தில் இந்த மதமாற்ற நடவடிக்கைகள் பெருமளவில் காணப் படுகின்றன. இவற்றைத் தடுக்கும் வகையில் இந்து சமய விவகார

(14ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பில்

## புனர்வாழ்வு அலுவலகம் மீது நேற்றிரவு குண்டுத் தாக்குதல்

மட்டக்களப்பு,ஓக.7

மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ் வுக் கழக அலுவலகம் மீது இனந் தெரியாத நபர்கள் குண்டுத் தாக்கு தல் மேற்கொண்டுள்ளனர்.

நேற்று இரவு 8.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இந்தக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் அலுவலகத் தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கண்ணி வெடி அகற்றும் குழுவின் வாகன மொன்று பலத்த சேதத்திற்குள்ளாகி யுள்ளது.

இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இந்த அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் பற்றி கண்காணிப் புக் குழு மற்றும் பொலீஸார் விசா ரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த அலுவலகத்தின் மீது கடந்த சில மாதங்களுக்கு முன்பும் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

## பண்ணையில் சோதனைகளை படையினர் தீவிரப்படுத்தினர்

### பயணிகள் மத்தியில் அச்சம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.7

தீவுப்பகுதிகளில் இருந்து யாழ். நகரப் பகுதிக்குள் பிரவேசிக்கும் சகல ரையும் பண்ணையில் நிலைகொண் டுள்ள படையினர் தீவிரமாகச் சோதனை யிட்டு வருகின்றனர்.

தீவுப்பகுதிக்கான பயணிகள் சேவையில் ஈடுபடும் பஸ்கள், மினிபஸ் கள் மற்றும் வாகனங்கள் அனைத் தும் தீவக நுழைவாயிலில் - பண் ணைப் பாலத்துக்குச் சமீபமாக - படை யினரால் தடுத்துநிறுத்தப்படுகின்றன.

பின்னர் ஒவ்வொரு பயணிகளின தும் அடையாள அட்டைகள் தனித் தனியே பரிசோதிக்கப்படுகின்றன. தொடர்ந்து வாகனங்களும் தீவிரமாக சோதனைக்கு உட்படுத்தப்படுகின் றன.

இதனால், பண்ணை நுழைவாயில் பகுதி எந்தநேரமும் வாகன நெரிசல் மிக்க பகுதியாக மாறியுள்ளது. அத்து டன், நகரப் பகுதியில் இருந்து தீவுப் பகுதிக்குள் பிரவேசிக்கும் வாகனங்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நுகேகொட தனியார் வங்கியில் 25 லட்சம் ரூபா கொள்ளை!

### நேற்றுப் பட்டப் பகலில் சம்பவம்

கொழும்பு,ஓக.7

நுகேகொட தனியார் வங்கியொன் றில் பட்டப்பகலில் பாதுகாவலர்களை நையப்புடைத்துவிட்டு 25 லட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள் ளது.

நேற்று இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் பற்றித் தெரியவருவதா வது:-

நேற்று மாலை 3.30 மணியள வில் நுகேகொட செலான் வங்கிக் குள் புகுந்த இரண்டு கொள்ளையர் கள் அங்கு காவல் கடமையிலிருந்த இரண்டு பாதுகாப்பு ஊழியர்களை யும் மடக்கி நையப்புடைத்தனர். பின் னர், அவர்களை வங்கியின் ஒரு மூலையில் இழுத்துச்சென்று போட்டு விட்டு இந்தத் துணிகரக் கொள்ளையை மேற்கொண்டபின் தப்பிச் சென்றுள்ள னர்.

ஆறு பேர்கொண்ட இந்தக் கொள்ளைக் கோஷ்டியினரில் நால் வர் வங்கியின் வாயிற் பகுதியில் யாரையும் உள்ளே செல்லவிடாமல்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

வன்னி மாவட்டப் பாடசாலைகளில் கற்பிக்கும்

# ஒப்பந்த அடிப்படை ஆங்கில ஆசிரியருக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரிக்கை

## அடைக்கலநாதன் எம்.பி. கல்வி அமைச்சருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஓக.7

வன்னி மாவட்டப் பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கல்வி அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கவேண்டுமென்ற நோக்கில் 23.07.2001 திகதிய 8/6/01(8) இலக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. இதற்கமைய ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் விசேட சித்தி அல்லது ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி பெற்று ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர்களுக்கு 01.08.2001 இல் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது.

பின்னர் 05.05.2002 இல் வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூரின் தலைமையில் நடந்துமுடிந்த நடமாடும் சேவையிலும் இவ்விடயம் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அப்போதே ஆயிரம் ஆசிரியர்களுக்கான அங்கீகாரம் கிடைக்கும்போது இவ் ஆங்கில ஆசிரியர் நியமனங்களும் உள்ளடக்கப்பட்டு நிரந்தர நியமனம் வழங்கப்படும் எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால், நேர்முகப் பரீட்சை நடைபெற்று இரண்டு வருடங்கள் முடிந்த பின்னரும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆங்கில பாடத்தைப் பாடசாலைகளில் கற்பிப்பதற்கு கூடிய கவனம் எடுக்கப்படுமென பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களும் கோரப்படுவதைக் காணக்கூடியதாய் உள்ளது.

1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நாட்டிலுள்ள பாடசாலைகள் அனைத்தும் ஒருசில பட்டினப் பாடசாலைகளைத் தவிர தேசிய மொழிகளுக்கு மாற்றப்பட்டதனால்தான் ஆங்கில ஆசிரியர்களுக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டது.

நான் பிரதிநிதித்துவப்படுத்தும் வன்னித் தொகுதியின் கிராமங்களில் ஜி.சீ.ஈ சாதாரணப் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றவர்களைக்கூட காண்பது அரிதாகும்.

தற்போது ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்களாகப் பணிபுரிபவர்கள் வேறு வேலை தேடிச் சென்றுவிட்டால் அதன் பின்னர் வன்னித் தொகுதிக் கிராமிய பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்க எந்த நபரும் இருக்கமாட்டார்கள் என்ற நிலையே ஏற்படும்.

எனவே, ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கி ஆங்கில ஆசிரியர்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படாமல் தடுக்கும்படி கேட்டுகொள்கின்றேன் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-4)

## பயிற்சி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.7

எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த சாரணீய அழுத்தற் பயிற்சி (றில்) தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக மாவட்ட ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஐ-8)

## பஸ் சேவை நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.7

யாழ்ப்பாணத்திற்கும் மிருசுவிலுக்குமான பஸ் சேவை இம்மாதம் முதல் மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டம் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மிருசுவில் பகுதிக்கான பஸ் சேவை மிருசுவில் சந்தி வரையுமே நடத்தப்பட்டது.

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றப் பகுதியில் குடியமர்ந்துள்ள மக்களின் போக்குவரத்து வசதி கருதியே இந்தச் சேவை நீடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (எ-6)

# உடவளவை தேசியப்பூங்காவுக்குள் இரண்டு பொலீஸ் அணிகள் தேடுதல்!

## ஆயுதக்குழு ஊடுருவிய தகவலையடுத்து நடவடிக்கை

கொழும்பு,ஓக.7

உடவளவை தேசிய வனப் பூங்காவுக்குள் சுமார் 400 பேர் கொண்ட இரு பொலீஸ் அணிகள் தேடுதலகளை மேற்கொண்டு வருகின்றன. ஆயுதம் தரித்த குழுவொன்று இந்த வனப் பூங்காவுக்குள் ஊடுருவியிருப்பதாகப் பொலீஸ் மா அதிபருக்கு கிடைத்த ஒரு தகவலை அடுத்து இத்தேடுதல்கள் நடைபெறுகின்றன.

மொனறாகல உதவிப் பொலஸ் அத்தியட்சகர் டி.எஸ்.கருணாநாயக்க தலைமையிலான 200 பொலீஸார் தனமல்வில பிரதேசத்திலிருந்தும் எம்பிலிப்பிட்டிய உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் எர்ட்லி பேர்னாண்டோ தலைமையிலான 200 பொலீஸார் கொடகவெல பிரதேசத்திலிருந்தும் இக்காட்டுக்குள் நுழைந்து தேடுதலில் ஈடுபட்டிருக்கின்றனர்.

மொனறாகல, இரத்தினபுரி பொலீஸ் பிரிவுகளைச் சேர்ந்த பொலீஸ் நிலையங்களிலிருந்து இப்பொலீஸார் திரட்டப்பட்டிருக்கின்றனர்.

ஒரு கொள்ளைக்கோஷ்டியினரோ அல்லது வேட்டைக்காரர்கள் குழுவினரோ இக்காட்டுக்குள் நுழைந்திருக்கலாம் என்று பொலீஸார் நம்புகின்றனர்.

(எ)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ்.பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 19 முன்பள்ளிகள் இணைந்து நடத்திய கண்காட்சி அண்மையில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றது. மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் மற்றும் அதிகாரிகள் கண்காட்சியைப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். (எ)

# சிறுமியை காணவில்லையென வவுனியாவில் முறைப்பாடு

வவுனியா,ஓக.7

வவுனியா பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 10 வயதுச் சிறுமி ஒருத்தியைக் காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா பூந்தோட்டம் அகதிமுகாமில் வசித்துவந்த விமலதர்சினி சிவநாதன் (வயது -10) என்ற சிறுமியே இவ்வாறு காணாமற்போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப சிறுமி கடந்த மாதம் 28ஆம் திகதி வவுனியா, பூந்தோட்டம் அகதிமுகாமில் இருந்து குளிக்கச் சென்றதாகவும் -

இதுவரை அவர் வீடு திரும்பவில்லை என்றும் - அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-8)

# பாடசாலையில் அதிபர், பிரதி அதிபர் அடிதடி! மாறிமாறிக் கடிகள்!!

## பிள்ளைகள் பயத்தால் வீடுகளுக்கு ஓட்டம்

பதுளை,ஓக.7

பாடசாலை நிர்வாக மட்டத்தில் ஏற்பட்ட பிரச்சினை தொடர்பாக அதிபருக்கும், பிரதி அதிபருக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டு இருவரும் மாறி மாறிக் கடித்துக்கொண்ட ஒரு சம்பவம் அப்புத்தளைப் பகுதியைச் சேர்ந்த ஒரு பாடசாலையில் இடம்பெற்றிருக்கிறது.

இது தொடர்பாக, அப்புத்தளை பொலீஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒழுக்காற்று விசாரணை மேற்கொண்டு நீதி வழங்கும்படி, கல்விப் பணிப்பாளருக்குக் கடிதம் மூலம் கோரிக்கையும் விடப்பட்டிருக்கிறது.

இப்பாடசாலையில் பல்வேறு நிர்வாகச் சீர்கேடுகள், ஊழல்கள் இடம்பெறுவது குறித்து அதிபருக்கும் பிரதி அதிபருக்கும் இடையே முறுகல்நிலை உருவாகியது. இதைத் தொடர்ந்து ஆசிரிய தினவரவு கையொப்பப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு பிரதி அதிபர் கல்விக்காரியாலயத்திற்குச் செல்ல முற்படவே, அதிபர் கல்லொன்றினால் பிரதி அதிபரைத் தாக்கினார் எனவும் -

பிரதி அதிபர் கீழே விழுந்தவுடன் அதிபரும், பிரதி அதிபரும் கட்டிப் புரண்டு மாறி மாறிக் கடித்துக்கொண்டனர் எனவும் கூறப்பட்டது. இருவரும் தனித்தனியாகச் சிகிச்சை பெற்றுக் கொண்டனர்.

இச்சண்டையினால் மாணவர், மாணவிகள் பயத்தால் வீடுகளுக்கு ஓடிச் சென்று விட்டனர்.

இப்பாடசாலையில் 74 மாணவ, மாணவிகளின் பதிவு இருந்தபோதிலும், 50 பேர் மட்டுமே கல்வி கற்று வருகின்றனர். அதிபரும், பிரதி அதிபரும் மட்டுமே கடமையாற்றுகின்றனர்.

அதிபர், விடுதி அமைத்து வசதியாக வாழ்கின்றபோதும், பிரதி அதிபர் தொடர்ச்சியாக அங்கு தங்குவதில்லை என்றும் -

காலை 10 மணிக்கு பாடசாலை ஆரம்பமாகி, பிற்பகல் ஒரு மணிக்கு மூடப்படுகிறது என்றும் -

இச்சண்டைக்குப் பிறகு ஒருவர் மட்டுமே பாடசாலையில் கடமையிலுள்ளார் என்றும் கூறப்பட்டது. (எ)

சர்வதேச நாடாளுமன்ற மனித உரிமைகள் குழுவிடம்

# பொலீஸ் மீதான அரச நிர்ப்பந்தங்கள் குறித்து எதிர்க்கட்சி முறைப்பாடுகள்

கொழும்பு,ஓக.7

அரசின் சில அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொலீஸார் மீது நிர்ப்பந்தங்கள் பிரயோகிக்கின்றனர் என்று சர்வதேச நாடாளுமன்ற சங்கத்தினதும் அச்சங்கத்தின் மனித உரிமைகள் குழுவினதும் செயலாளரிடம் எதிர்க்கட்சிகள் முறையிட்டிருக்கின்றன.

இச்சங்கத்தின் செயலாளரான அன்டர்ஸன் வீ.ஜோன்சன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்தபோதே இவ்வாறு முறையிடப்பட்டது.

அரசின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொண்டனர் எனக் கூறப்படும் 45 சம்பவங்கள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ இந்த முறைப்பாட்டின்போது குறிப்பிட்டிருக்கின்றார்.

பொ.ஐ.மு. எம்பிக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட 26 குற்றச்சாட்டுகள் குறித்து ஏற்கனவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று அன்டர்ஸன் வீ. ஜோன்சன் எதிர்க்கட்சியினரிடம் தெரிவித்திருக்கிறார். (எ)

# கல்முனை தனியார் பஸ் ஊழியர்கள் நேற்றுத் திடீர் வேலைநிறுத்தம்

நிந்தவூர்,ஓக.7

கல்முனை தனியார் பஸ் கம்பனியைச் சேர்ந்த பஸ் உரிமையாளர்கள், ஊழியர்கள் நேற்று வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றில் குதித்தனர்.

பல்வேறு கோரிக்கைகளை முனவைத்து நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தால் கல்முனை - அக்கரைப்பற்று, கல்முனை - அம்பாறை வீதிகளில் தனியார் பஸ் சேவைகள் ஸ்தம்பிதமடைந்தன. பயணிகள் பெரும் சிரமங்களுக்குள்ளாகியிருந்தனர்.

போக்குவரத்து வழி அனுமதிப்பத்திரமின்றி சேவையாற்றும் தனியார் பயணிகள் வாகனங்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும், கல்முனையிலுள்ள தனியார் பஸ் நேரக்காப்பாளரை உடன் பதவி நீக்கம் செய்ய வேண்டும், இடை யில வழிமறித்துச் செல்லும் வாகனங்களுக்கு அனுமதியளிக்கக்கூடாது, அளவுக்கதிகமாக வழி அனுமதிப்பத்திரங்கள் வழங்கக் கூடாது என்பன போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இப்போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவருவது குறித்து கல்முனை பிரதேச செயலகத்தில் உயர் மட்டக் கூட்டம் ஒன்று நேற்று நடைபெறவிருந்தது. (எ)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஓக.7

'சிங்களக் குடியேற்றவாதமும் ஈழத்தின் மீதான பொருளாதாரப் பாதிப்புகளும்' என்னும் தலைப்பில இன்று முற்பகல் 11 மணிக்கு பலாலி ஆசிரியர் கலாசாலையில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

யாழ்பல்கலைக்கழக பொருளியல் துறையில் அதிதிப் புலமைவாளர் வி.நித்தியானந்தம் இக்கருத்தரங்கில் கருத்துரை வழங்கவுள்ளார்.

இதில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு தமிழர் தேசிய விழிப்புணர்வுக் கழகத்தினர் கேட்டுள்ளனர். (ஐ-8)

# மன்னார் - வவுனியா பஸ் சேவைகளை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்

## மாவட்ட எம்.பிக்களுடனான சந்திப்பில் அமைச்சர் மாரப்பன உறுதி

கொழும்பு,ஓக.7

மன்னார் - வவுனியா மாவட்ட பஸ் சேவைகளை மேம்படுத்துவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு, போக்குவரத்து, விமானச் சேவைகள் அமைச்சர் திலக் மாரப்பன உறுதியளித்திருக்கிறார்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான நூர்தீன் மசூர், த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், ராஜா குகனேஸ்வரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் நேற்று முன்தினம் அமைச்சரை நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் சந்தித்தபோதே இவ்வாறு உறுதியளிக்கப்பட்டது.

போக்குவரத்துச்சபைத் தலைவர் யூ.எல்.எம்.பாருக்கும் இச்சந்திப்பில் கலந்துகொண்டார்.

மன்னார் போக்குவரத்துச் சபைக்கான ஊழியர்களை மன்னார் மாவட்டத்தின் இனவிகிதாசார அடிப்படையில் தெரிவுசெய்யவேண்டும் என்ற கொள்கை இச்சந்திப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மன்னார் - வவுனியா மாவட்டங்களுகுப் புதிய பஸ்கள் பெற்றுத்தரப்படும் என அமைச்சர் அங்கு உறுதியளித்தார்.

மன்னார் தாம்போதியையும், உடைந்த பாலத்தையும் புனரமைப்பது தொடர்பான செலவு மதிப்பீட்டைச் சமர்ப்பித்தால் உரிய நடவடிககை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

பழுதடைந்த பஸ்களுக்கு மதவாச்சி தொழிற்சாலையில் சீர்திருத்தப்பட்ட இயந்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(எ)

## இலக்கிய சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஓக.7

தமிழகத்திலிருந்து வெளியாகும் 'காலச்சுவடு' சஞ்சிகையின் ஆசிரியர் கண்ணன் அவர்களுடனான சந்திப்பொன்று யாழ்.பல்கலைக்கழக நாடக விரிவுரை மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல்3.30 மணிக்கு எழுத்தாளர் அ.யேசுராசா தலைமையில் இடம்பெறவுள்ளது. கலை இலககிய ஆர்வலர்களை இச் சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

# கொழும்பு பிரதி முதல்வர் தெரிவுக்கு எதிரான மனு நீதிமன்றினால் நிராகரிப்பு

கொழும்பு,ஓக.7

கொழும்பு மாநகரசபையின் பிரதி முதல்வர் பதவிக்கு அசாத்சாலி நியமிக்கப்பட்டதை ரத்துச்செய்யுமாறு கோரி, தாக்கல் செய்யப்பட்ட மனுவைப் பூர்வாங்க ஆட்சேபனையின் பேரில் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடிசெய்தது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான நிமால் திஸாநாயக்க, ராஜா பெர்னாண்டோ ஆகியோருடன் இணைந்து நீதிபதி நிசங்க உடலகம இத்தீர்ப்பை வழங்கினார்.

பிரதி முதல்வர் அசாத்சாலி கடந்த மாநகரசபைத் தேர்தலின் போது மாநகரசபை எல்லைக்குள் வசிக்கவில்லை என்பதால் உள்ளூராட்சிச் சட்டங்களுக்கு ஏற்ப அவர் பிரதி முதல்வர் பதவியை வகிக்கத் தகுதியற்றவர் என்று மனுவில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் பலதரப்பட்ட முரண்பாடுகள் உள்ளன என்பதைச் சுட்டிக்காட்டி, பூர்வாங்க ஆட்சேபம் தெரிவித்த எதிர்மனுதாரர் அசாத்சாலியின் சட்டத்தரணிகள் மனுவை நிராகரிக்கும்படி கோரியிருந்தனர்.

பூர்வாங்க ஆட்சேபனையை ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமலேயே தள்ளுபடி செய்து விட்டது.

(எ)

### இந்தியாவில் விற்பனை செய்யப்படும்

# அமெ.நிறுவனங்களது பானங்களில் அளவுக்கதிகமான நச்சுப்பொருள்!

## அறிவியல் ஆய்வு மையம் தகவல்

புதுடில்லி,ஓகஸ்ட்7

**இந்திய குளிர்பானச் சந்தையில் விற்பனையாகும் அமெரிக்க நிறுவனங்களின் தயாரிப்புக்களான பெப்ஸி, கொக்கோ கோலா, பண்டா, செவன் - அப் உட்பட பன்னிரண்டு பிரபல குளிர்பானவகைகளில் பூச்சி கொல்லிகள் என்ற பெயரில் அளவுக்கதிகமான நச்சுப் பொருள் கலக்கப் பட்டுள்ளது.**

**- இவ்வாறு திடுக்கிடும் ஆய்வுத் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது டில்லியைச் சேர்ந்த 'அறிவியியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம்.**

பெப்சி, மவுன்டைன் டியூ, டயட் பெப்சி., மிரண்டா ஒரேஞ், மிரண்டா லெமன், புளூ பெப்சி, செவன் - அப், கொக்கோ - கோலா, பண்டா, லிம்கா, ஸ்பிரைட், தம்ஸ் - அப் ஆகிய 12 குளிர்பானங்களை டில்லியைச் சேர்ந்த அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் ஆய்வுசெய்தது.

பொதுவாக தண்ணீரில் உள்ள கிருமிகளை அழிப்பதற்காக ஆர்கனோ குளோரைன் மற்றும் ஆர்கனோ பொஸ்பரஸ் ஆகிய இரசாயனப் பொருள்கள் பயன்படுத்தப்படும். இவை ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால், மேற்காணும் 12 குளிர்பானங்களிலும் இந்த இரசாயனப் பொருள்களின் மிச்சங்கள் - சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவைக் காட்டிலும் 30 முதல் 36 மடங்கு அதிகமாக இருந்தன என்று ஆய்வில் தெரியவந்தது.

பெப்சி தயாரிப்புக் குளிப்பான வகைகளில் ஒரு லீற்றரில் சராசரியாக 0.0180 மில்லிகிராம் பூச்சி கொல்லி கலந்துள்ளது. இது சர்வதேச அளவில் நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட 36 மடங்கு அதிகமாகும். 'கொக்கோ - கோலா' தயாரிப்புக்களில ஒரு லீற்றர் குளிர்பானத்தில் 0.0150 மில்லிகிராம் பூச்சி கொல்லி கலந்துள்ளது. இது சர்வதேச அளவை விட 30 மடங்கு அதிகமாகும்.

இந்த அதிர்ச்சிகரமான தகவலை அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையத்தின் இயக்குநர் சுனிதா நரேன தெரிவித்தார். இதே நிறுவனங்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் தயாரித்து விற்பனைக்கு அனுப்பும் குளிபானங்களையும் டில்லி அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் ஆய்வு செய்தது. ஆனால், அவற்றில் பூச்சிகொல்லி மருந்து எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஏனென்றால், இந்த விஷயத்தில் அந்த நாடுகள் கடுமையான ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்கின்றன என்று சுனிதா நரேன் கூறினார்.

உணவு மற்றும் குளிர்பானத் தொழிலைக் கட்டுப்படுத்த சட்டம் அவசியம் தேவை. இந்த விஷயத்தில் நாம் மக்களின் உடல்நலத்தைத்தான் கருத்திறகொள்ளவேண்டுமே தவிர, தொழிற்சாலைகளைப்பற்றி அல்ல என்று சுனிதா நரேன் மேலும் கூறினார்.

இந்தியாவில் 2000 - 2001 ஆம் ஆண்டில் 650 கோடி குளிர்பானப் போத்தல்கள் விற்பனையாகியுள்ளன.

குளிர்பானங்களில் சேர்க்கப்படும் இந்தப்பூச்சிகொல்லிகள் 30,40 மடங்கு அதிகமானால் அவை உடலில் சிறிது சிறிதாகச் சேர்ந்து நீண்டகாலப் புற்று நோய், நரம்புக்கோளாறு, குழந்தைப் பிறப்பு பாதிப்பு போன்றவை ஏற்படும். மொத்தத்தில் இவை உயிருக்கே ஆபத்தை விளைவித்துவிடக்கூடிய அபாயம் உள்ளது.

இதேவேளை -

டில்லி அறிவியல் மற்றும் சுற்றுச் சூழல் மைய அறிவிப்பை பெப்ஸி, கொக்கோ - கோலா நிறுவனங்கள் மறுத்துள்ளன. தங்கள் தயாரிப்புக்களை ஆய்வுசெய்ய சர்வதேச நிறுவனம் ஒன்றை அரசு நியமித்தால் அதற்குத் தாங்கள் தயார் என்றும் கூறியுள்ளன.

## 340 பலஸ்தீனக் கைதிகளை இஸ்ரேல் நேற்று விடுவித்தது



ஜெருசலேம்,ஓக.7

நல்லுறவு அடையாளமாக 340 பலஸ்தீனக் கைதிகளை இஸ்ரேல் நேற்று விடுவித்தது.

இஸ்ரேலில் இடம்பெற்ற தீவிர வாதத் தாக்குதல்களில் சம்பந்தப்படாத - பாதுகாப்பு நடவடிக்கைகளில் கைதான பலஸ்தீனர்களே விடுவிக்கப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்தது.

ஆயினும், இஸ்ரேலியச் சிறைகளில் சுமார் 6 ஆயிரம் பலஸ்தீனர்கள் கைதிகளாக உள்ளதாக நம்பபபடும் நிலையில், இந்த 340 பேரின் விடுதலை பலஸ்தீனர்களைத் திருப்திப்படுத்தாது என்றே கருதப்படுகிறது.

நேற்று விடுவிக்கப்பட்ட பலஸ்தீனாகள் இஸ்ரேலுக்கும் காஸாவுக்கும் இடையேயுள்ள 4 பிரதான சோதனைநிலையங்கள் ஊடாக பஸ்களில் அனுப்பப்பட்டனர்.

கைதிகளை விடுவிக்கும் நடவடிக்கை இஸ்ரேலிய, பலஸ்தீன உறவில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் என்று இல்ரேலிய அரசின் பேச்சாளர் கூறினார். ஆனால், 540 பலஸ்தீனக்கைதிகளை விடுவிப்பதாகக் கூறிய இஸ்ரேல், தற்போது 340 பேரை மட்டும் - அதிலும் பெரும்பாலும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களையே விடுவித்திருப்பது பலஸ்தீனர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக காஸாவிலுள்ள பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

பலஸ்தீனக் கைதிகளை விடுவிக்கும் நடவடிக்கை நேற்று இடம் பெற்றுக்கொண்டிருந்த சமயம், மேற்குக்கரைநகரான ஜெரிக்கோவுக்குள் புகுந்த இஸ்ரேலியப் படையினர் தீவிர தேடுதல்நடத்தினர். இந்தத் தேடுதலின்போது குறைந்தது 8 பலஸ்தீனர்கள் கைதுசெய்யப்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஜுன் மாதம் பலஸ்தீனத் தீவிரவாதிகள் யுத்தநிறுத்தம் அறிவித்த பின்னர், மேற்குக்கரையில் இஸ்ரேல் பெருமெடுப்பில் நடத்திய தேடுதல் நடவடிக்கை இதுவெனக் கூறப்படுகிறது. (ஒ)

## லைபீரிய அதிபரின் மனமாற்றம்

மொன்றோவியா,ஓக.7

பதவி விலகி நாட்டைவிட்டு வெளியேறுவதாக முன்னர் உறுதியளித்த லைபீரிய ஜனாதிபதி சாள்ஸ் ரெய்லர், இப்போது மனம் மாறுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. தலைநகர் மொன்றோவியாவின் நிலை சகஜமாகி வருவதைத் தொடர்ந்து அவருக்கு இந்த மனமாற்றம் ஏற்பட்டிருக்கலாம் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

ஜனாதிபதி ரெய்லர் இம்மாதம் 11ஆம் திகதி பதவி விலகுவதாக முன்னர் அறிவித்திருந்தார்.

ரெய்லர் பதிவ விலகி ஒருநாளுக்குள் அவர் லைபீரியாவை விட்டு வெளியேறி நைஜீரியாவுக்கு செல்லவிருப்பதாக என்னிடம் தொலைபேசியில் தெரிவித்திருந்தார் - என்று தென்னாபிரிக்க ஜனாதிபதி தாபோ மேகி கடந்த செவ்வாயன்று தெரிவித்திருந்தார். நைஜீரியா வழங்கவிருக்கும் புகலிடத்தை ஏற்க ரெய்லர் இப்போது தயாராக இல்லை என்று நைஜரிய நாட்டு அதிகாரி ஒருவர் தெரிவிக்கின்றார்.

ரெய்லர் தனது உப ஜனாதிபதி மோசஸ் ப்றாவிடம் பதவியை ஒப்படைப்பதாகக் கடந்த வார இறுதியில தெரிவித்திருக்கிறார். ஆனால், நைஜீரியா செல்வது பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை. அயல் நாடான சியாராலியோனில் யுத்தக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையில்தன் மீது வழக்குத் தொடுக்கப்படலாம் என்று அவர் அஞ்சுவதாகவும -

அதற்கெதிராக பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென்று அவர் எதிர்பார்ப்பதாகவும் - பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இதேவேளை - லைபீரியாவுக்கு நிதியுதவி வழங்குமாறு ஐ.நா. நேற்று கேட்டுள்ளது. உணவு உறைவிடம், மருத்துவ உதவி போன்றவற்றை 10 லட்சம் மக்களுக்கு வழங்குவதற்கு 7கோடி டொலர்களை தருமாறு அது உலக நாடுகளைக் கோரியுள்ளது.

## ஹெலிகொப்டர் விபத்தில் யாத்திரிகர்கள் உயிரிழப்பு

### அமர்நாத் சென்று திரும்புகையில் விபரீதம்

ஸ்ரீநகர்,ஓக.7

இந்தியாவில் அமர்நாத் குகைக் கோயிலுக்குச்சென்ற யாத்திரிகர்களுடன் ஸ்ரீநகருக்குத் திரும்பிக் கொண்டிருந்த ஹெலிகொப்டர் நேற்றுமுன்தினம் காலை விபத்துக்குள்ளானதில் 4 யாத்திரிகர்களும் விமானியும் பலியானார்கள்.

அமர்நாத் குகைக் கோயிலில் தரிசனம் முடித்த பக்தர்களுடன் ஸ்ரீநகருக்கு வந்துகொண்டிருந்த அந்த ஹெலிகொப்டர், நேரு இறங்கு தளத்தை வந்தடைவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னதாக கங்சர்பால் என்ற ... த்தில் ... லச் ... மரத்தின் மீது மோதி நொறுங்கி விழுந்தது.

விமானியும், யாத்திரிகர்களில் மூவரும் அந்த இடத்திலேயே இறந்தனர். மற்றொருவர் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


விபத்து நிகழ்ந்த பகுதி பனி மூட்டமாக இருந்ததும் ஹெலிகொப்டர் தாழ்வாகப் பறந்ததுமே விபத்துக்குக் காரணம் என பொலீஸார் தெரிவித்தனர். அமர்நாத் பக்தர்களின் வசதிக்காக இந்த ஆண்டுதான் ஹெலிகொப்டர் சேவை தொடங்கப்பட்டமை குறிப்பிடத தக்கது. (ஒ)

## முதல் அணுகுண்டுத் தாக்குதலின் நினைவு தினம் நேற்று அனுஷ்டிப்பு

உலகின் முதல் அணுகுண்டுத் தாக்குதலின் 58 ஆவது ஆண்டு தினம் ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.



அனுகுண்டு வெடித்ததில் ஏற்பட்ட நாசம்.



நினைவிடத்தில் நேற்று அதிகாலை தீபங்களுடன் பிரார்த்தனை



ஜப்பானிய சம்பிரதாயப்படி நீண்ட ஆயுளின் சின்னமாகக் கருதப்படும் காகிதக் கொக்குகளை நினைவிடத்தில் வைக்கும் சிறுவர்கள்.




அனு ஆயுத ஒழிப்பை வலியுறுத்தி இடம்பெற்ற ஆர்ப்பாட்டம்.

## பாக். மீது ரொக்கெட் வீச்சு!

பாகிஸ்தான் மீது ரொக்கெட் வீசித் தாக்குதல் நடத்தியது ஆப்கானிஸ்தான். கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த இத்தாக்குதல் தற்செயலானது என்று ஆப்கானிஸ்தான் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தானிய ராணுவ வீரர்கள் ரொக்கெட்டை தங்கள் எல்லையிலிருந்து பாகிஸ்தானை நோக்கிச் செலுத்தினர். அது குவெட்டா நகருக்கு வடமேற்கில் 150 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள சமன் என்ற எல்லைப்புற நகருக்கு வெளியே ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியில் விழுந்து வெடித்தது. பாகிஸ்தானிய எல்லைப் படையினர் சம்பவ இடத்துக்குச் சென்று நடந்ததை அறிந்து ஆப்கானிஸ்தான் அதிகாரிகளிடம் விளக்கம் கேட்டனர்.

பாகிஸ்தான் பகுதியைத் தாக்குவதற்காக ரொக்கெட்டை ஏவவில்லை. பயிற்சியின்போது தற்செயலாக அது ஏவப்பட்டுவிட்டது என்று ஆப்கான் அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.7

ஆரம்பப் பிரிவு ஆங்கில நாடகப் போட்டியில் பங்குபற்றும் யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களுக்கும் யாழ்.கல்வி வலய ஆங்கிலபாட உதவிக்கல்விப் பணிப்பாளர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு யாழ்.வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.(ம-10)

# படையினருக்கு பிணை அனுமதி

தென்மராட்சி,ஓக.7

முகமாலை படை முகாமில் இடம் பெற்ற பகிடிவதையினால் இறந்த தாகக் கூறப்படும் சிப்பாயின் மரணம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த படையினர் 17 பேர் நேற்று முன்தினம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் சாவகச்சேரி நீதிவான் இப்பிணை அனுமதியை வழங்கினார்.

இந்த சந்தேக நபர்களை ஒரு லட்சம் ரூபா ரொக்கப்பிணையுடன் அதிகாரி தரத்திலான உத்தியோகத்தரின் ஆட்பிணையிலும் செல்ல மேல நீதிமன்றம் முன்னர் அனுமதித்திருந்தது.

இதனை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றில் சந்தேக நபர்கள் முறையிட்டதையடுத்து 50 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், 2ஆள் பிணையிலும் அல்லது ஒரு லட்சம் ரூபா காசுப்பிணை மற்றும் ஒரு அரச உத்தியோகத்தர் உட்பட இருவரின் ஆட்பிணையிலும் செல்ல மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு வழங்கியது. (ஓ117)

## வெங்காயச் செய்கை மழையால் பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.7

கடந்த மூன்று நாள்கள் இடையிடையே பெய்த மழை காரணமாக புத்தூர் கிழக்குப் பகுதியில் வெங்காயச் செய்கை பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

பெருமளவில் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்ட இப்பகுதி தாழ் நிலமாக இருந்ததால் பெய்த மழை நீர் தேங்கியது. இதனால் வெங்காயப் பயிர்கள் நீரில் மூழ்கி அழுகியுள்ளன.

இதனால் வெங்காயச் செய்கையினை மேற்கொண்ட விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்க நேரிட்டுள்ளது. (ஒ-6-15)

## இரண்டாம் தவணை விடுமுறை நாளை ஆரம்பம்

வலிகாமம்தெற்கு,ஓக.7

அரசாங்கப் பாடசாலைகள் அனைத்தும் இரண்டாம் தவணை விடுமுறைக்காக நாளை வெள்ளிக்கிழமை முதல் மூடப்படவுள்ளன.

அதேசமயம், அண்மையில் நடைபெற்ற ஜ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையின போது பரீட்சை நிலையங்களாகச் செயற்பட்ட பாடசாலைகள் இம்மாதம 15ஆம் திகதி விடுமுறைகளுக்காக மூடப்படவுள்ளன.

சகல பாடசாலைகளும் மூன்றாம் தவணைக்காக செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி திறக்கப்படும். (ம-152)

## அதிபர்கள் கூட்டம்

வலிகாமம்தெற்கு,ஓக.7

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு உடுவில் கோட்ட காரியாலயத்தில், கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில், 2004ஆம் ஆண்டுக்கான இலவச பாடநூல்கள், இலவச சீருடைகள் தொடர்பான விடயங்கள் மற்றும் எதிர்வரும் ஜீ.சி.ஈ. பரீட்சை மாணவர்களுக்கு இரண்டாம் தவணை விடுமுறை காலத்தில் விசேட வகுப்புகள் நடத்துவது தொடர்பான விடயங்கள் ஆராயப்படவுள்ளன. (ம-152)


**வேலை ஆள் தேவை**

எமது ஸ்தாபனத்துக்கு (ஆண்கள் மட்டும்) முன் அனுபவமுள்ள வேலை ஆள் (சிற்றூழியர்) தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது.

தகுதியானவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

நேரில் வரவும்.

சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.222 2567

(C/29326) (21-32-15-19)

**இதோ!**

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும். கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 - 222 - 2567

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-29245)

**நல்லூர்க் கந்தன் உற்சவகால**

**புத்தக மலிவு விற்பனை**

இந்தியாவில் இருந்து விஷேடமாக இறக்குமதி செய்யப்பட்ட சமய இலக்கியங்கள், சிறுவர் கதைகள், ரமணிச் சந்திரன் கதைகள், இலக்கிய நூல்கள், கம்பியூட்டர் நூல்கள், தமிழ், ஆங்கில, சிங்கள அகராதிகள் மற்றும் பாடசாலைப் புத்தகங்கள் 10% கழிவுடன் வழங்கப்படும்.

திருவிழாச் சிறப்பு விற்பனை

நல்லூர் சிவாலயம் முன்பாக

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை,**
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி : 021-222 2573.

(21-15-19) (சி-29301)

**ஜெனரேட்டர்கள்**

உங்களது மின்சாரப் பிரச்சினையைத் தீர்க்க ஹொண்டா (HONDA) ஜெனரேட்டர்கள்.

650W,1000W, 1200W, 1600W, 2600W

வீடுகள், காரியாலயங்கள், ரெஸ்டூரண்டுகள், கடைகள், மண்டபங்கள், டிஸ்பென்சறிகள், தோட்ட பங்களாக்கள்.....
இன்னும் பல!
உடனடி விற்பனைக்கு உண்டு.

கையிருப்பு சொற்பமே!

**GENERAL EQUIPMENTS LTD**
316,400, Sri Sangaraja Mawatha, Colombo - 12
(C/29276) Tel.: 345046, 327264, 343822, 430799, Fax: 434637

(27-21-19-15)


## ஓராண்டு நினைவு நாள்



**அமரர் ஆறுமுகம் இளையதம்பி**

மலர்வு 18-03-1932 | உதிர்வு 17-08-2002

கண்ணுக்குள் மறையவில்லை உங்கள் முகம்
நெஞ்சைவிட்டு அகலவில்லை உங்கள் நினைவு
ஆண்டுதான் ஒன்று சென்றாலும் எம் வாழ்வில்
உங்கள் அன்பு எம்மை விட்டு நீங்காது.

-குடும்பத்தினர்.

உசன், மிருசுவில். (21126)(21-15-19)

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணக வாழ்வு 22 - 03 - 1923



விண்ணக வாழ்வு 19 - 07 - 2002

**அமரர் ஸ்ரீமான் நல்லையா கனகரெத்தினம்**

[ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் (C.T.B., கரம்பகம்) - கிளிநொச்சி]

திதி: 07-08-2003

அன்போடும் பண்போடும் வளர்த்து எம்மை
ஆளாக்கி வாழ வைத்த தெய்வமே!
என்புடலை விட்டேகி இன்று
ஆண்டும் ஒன்று ஆனதுவோ?
கண்ணீரோடு கலங்குகின்றோம் எம்
கலக்கமதைத் தீராயோ?
மண்ணில் நாம் வாடுகின்றோம் அருள்
மழையாய் நீயும் வாராயோ?

உங்கள் நினைவில் நனைந்திடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கரம்பகம், மிருசுவில். 36, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(21100)(21-15-19)

## 33 ஆம் நாள் நினைவஞ்சலி

உதயம் 29 - 12 - 1925



அஸ்தமனம் 06 - 07 - 2003

**டாக்டர் சிதம்பரப்பிள்ளை நாகரட்ணம்**

(அராலி தெற்கு)

'பாலா! பாலா! என்று அழைக்கும்போது இன்னொரு முறை 'பாலா! என்று கூப்பிடமாட்டாரோ? என்னும் அளவுக்கு அவரது நாவிற்கு சரஸ்வதி மக்களை அரவணைக்கும் தன்மையைக் கொடுத்துள்ளாள். உண்மையாகவே அவர் தமது இளைப்பாறும் நாளில் இருந்து ஊர் மக்களுக்குச் சேவை மனப்பான்மையுடன் வைத்திய சேவைபுரிந்தும் வறுமையில் வாழ்பவர்களுக்கு இலவச உதவியும் செய்துவந்தார்.

அன்னாரின் இழப்பு வட்டுக்கோட்டை வாழ் மக்களுக்கும் அராலி அயலவர்களுக்கும் மிகுந்த வேதனையைத் தருகின்றது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அராலிப் பிள்ளையாரையும், முத்துமாரி அம்மனையும், மாளிகாவத்தைப் பிள்ளையாரையும் வேண்டுகின்றோம்.

T.Chandrapalan
Auctioneer Broker Valuer
&
Court Commissioner Colombo-10.

(21110)(21-15-19)

## பவள விழா வாழ்த்து



"மதுரா"
மூளாய் மேற்கு,
சுழிபுரம்.

தொல்புரம் கிழக்கைச் சேர்ந்த

**திருமதி கமலாம்பிகை சுந்தரலிங்கம்**

அவர்கள்

இன்று (07.08.2003) வியாழக்கிழமை தனது 75ஆவது அகவையைப் பூர்த்திசெய்து பவளவிழா காண்கின்றார்.

எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய
திருமதி கமலாம்பிகை சுந்தரலிங்கம் அவர்களை
நலமுடன் வாழ வாழ்த்தி நிற்கும்:

| | |
|---|---|
| சின்னத்தம்பி கமலலோஜினி | தொல்புரம் |
| சூரியகுமார் செல்வராணி | ஆஸ்திரேலியா |
| தியாகலிங்கம் சகுந்தலை | மூளாய் |
| மகாலிங்கம் மாதினி | அமெரிக்கா |
| சுகிர்தகுமார் மாலினி | வவுனியா |

ஞானலிங்கம் - சுவிஸ்
மற்றும் பேரக்குழந்தைகள்.

(21124)(21-27-15-19)

உதயன்

# இனவாதத்தோடு மதவாதமுமா?

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்காக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் தற்போதைய சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்காக சிங்களப் பேரினவாதம் திரும்பவும் ஒன்றுதிரண்டிருப்பது குறதது நேறறு இபபநதயல பரஸதாபததருநதோம.

நாட்டில் அமைதித் தீர்வு ஏற்படாமல் குழப்புவதற்காக - தமிழர்களுக்கும் சமவுரிமை வழங்கப்பட்டு விடுவதைத் தடுப்பதற்காக - இனவாதத்தோடு மதவாதமும் தற்போது கிளப்பப்பட்டிருப்பது வேதனைக்குரியது.

சிங்கள, பௌத்த தீவிரங்கொண்ட பேரின - மத - வாதம் இவ்வளவு காலமும் சிறுபான்மை இனத்தவருக்கு உரிமைகள் வழங்கப்படுவதை - நியாயம் வழங்கப்படுவதை - மூர்க்கமாக எதிர்த்து வந்தது. இப்போது சிறுபான்மை மதத்தினருக்கு எதிராகவும் அது திரும்பியிருக்கின்றது.

தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு எதிராகத் தீவிர பிரசாரம்செய்து, அந்த முயற்சிகளைத் தடுத்து நிறுத்தும் நோக்கோடு புதிய கூட்டு இயக்கம் ஒன்று ஆரம்பககபபடடிருபபது பறற கடநத தஙகளனறு கொழுமபல நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாடு ஒன்றில் தகவல் தெரிவிக்கப்பட்டது.

பல பௌத்த அமைப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிய தேசிய சங்க சம்மேளனம் இந்த ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தியது. அதில் தர்மவிஜய அமைப்பின் தலைவர் வண.கங்கொடவில சோமதேரர் தெரிவித்த கருத்துகள் இனவாதத்தோடு மதவாதமும் சேர்ந்து தீவிரம் பெறுவதை உறுதிப்படுத்துகின்றன.

"நாடாளுமன்றத்தின் ஊடாக வழங்க முடியாத ஈழத்தை மேற்குலக கிறிஸ்தவ சூழ்ச்சிக்காரர்கள் புலிகளுக்குப் பெற்றுக்கொடுக்க முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். எனவே, நாம் பேசுவதைக் குறைத்து, உயிரையும் தியாகம் செய்யத் தயங்காது, இடைக்கால நிர்வாகசபை என்ற போர்வையில் வழங்கப்படவுள்ள தமிழீழத்தைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

"ஒருபுறம் பிரிவினையை நோக்கி எமது நாடு போய்க் கொண்டிருக்கின்றது. இன்னொருபுறம் கிறிஸ்தவ மிதவாதிகளால் சிங்கள பௌத்தர்கள் மதமாற்றம் செய்யப்பட்டு வருகின்றார்கள். 2005 ஆம் ஆண்டளவில் இலங்கையில் பௌத்தமும் சிங்களமும் அழிந்துபோகும். எதிர்காலத்தில் மேற்குலக கிறிஸ்தவ மதமே இலங்கையில் வேரூன்றும்" - இவ்வாறு இனவாதத்தோடு மதவாதத்தையும் கலந்து முழங்கியிருக்கின்றார் தர்ம விஜய அமைப்பின் தலைவர்.

இனப்பிரச்சினைக்கு அப்பால் மதப்பிரச்சினையையும் அரசியல் வியாபாரமாக்கி, நாட்டை மேலும் குழப்பத்துக்குள் ஆழ்த்தும் பெரும்பான்மையினப் போக்கு, பெரியளவில் முகிழ்கத் தொடங்கியுள்ளது என்பதுதான் இப்போதைய நிலைமை. இனப்பிரச்சினையோடு மதப்பிரச்சினையையும் கிளப்பி, சூழ்நிலையை மோசமடையச் செய்வதன்மூலம் சிறுபான்மை இனத்தவருக்கு சமவுரிமை கிடைப்பதைத் தடுக்கலாம் என்பது பேரினவாதிகளின் திட்டம்.

மதப் பிரச்சினைகள், மதமாற்றச் சிக்கல்கள், அவற்றால் பாதிப்புகள் என்பன இங்கு இல்லை என்று மறுக்க முடியாது. அவை இருக்கலாம். அவற்றோடு, இனப்பிரச்சினை, அதனால் எழுந்த கொடூர யுத்தம், அந்த யுத்தத்தால் ஏற்பட்ட நலிவு ஆகியவற்றைச் சாதகமாகப் பயன்படுத்தி, வசதியுள்ள மதங்கள், தீவிர மதமாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன என்ற குற்றச்சாட்டுகளும் உள்ளன.

அத்தகைய முயற்சிகள், செயற்பாடுகள், போக்குகள் ஆகியவற்றிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டிய தளமும், அதன் அர்த்த பரிமாணமும் வேறாக அமைய வேண்டும். இனப்பூசல் மற்றும் அரசியல் சிக்கல்களுக்குள்ளே மதப் பிரச்சினையைக் கலந்து, குழப்பி, நாட்டை மேலும் மோசமான - விபரீத - நிலைக்குத் தள்ளக் கூடாது.

நமது நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில் உதவுவதற்கு மேற்குலக நாடுகள் முன்வந்துள்ளன. அந்த நாடுகள் பலவற்றில் கிறிஸ்தவம் மேலோங்கியிருக்கலாம். ஆனால், அதற்காக அந்த நாடுகள் மனிதாபிமான அடிப்படையில் உதவ வந்திருப்பதற்கு நமது நாட்டுப் பேரினவாதிகள் மதச் சாயம்பூசி, அதன் மூலம் குறுகிய அரசியல் லாபம் சம்பாதிக்க முயலக்கூடாது.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் மேற்குலக நாடுகள் மட்டுமல்ல, அவைபோன்றே கிழக்கில் உள்ள ஜப்பான், தாய்லாந்து போன்ற நாடுகளும் தீவிரமாக உதவ முன்வந்துள்ளன. ஜப்பானிலும் தாய்லாந்திலும் கிறிஸ்தவம் அல்ல - நமது நாட்டில் இருப்பது போன்று - பௌத்தமே கோலோச்சுகின்றது என்பதை, வெளிநாட்டு நல்லுதவியை தமது மதவாதப் பிரசாரத்துக்குப் பயன்படுத்தி அதை இங்கு அரசியலாக்க முயலும் பேரினவாதிகள் புரிந்துகொள்ளவேண்டும்.

மொழிரீதியாக - இனரீதியாக - தமிழர்கள் அடக்கப்பட்டதே இன்றைய அரசியல் சிக்கலுக்குக் காரணம். அதைத் தீர்ப்பதை விடுத்து, மதப்பூசலையும் அதற்குள் கொண்டுவந்து சிக்கவைப்பது, இந்த நெருக்கடியை மீளமுடியாத நிலைக்குள் தள்ளிவிடும் என்பதை அனைவரும் உணர்வது அவசியமாகும்.

# உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்துக்கு 50 லட்சம் ரூபா செலவில் நிரந்தரக் கட்டடம்

யாழ்ப்பாணம்,ஓக.7

பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்துக்கு யாழ். நகரின் மத்தியில் புதிய நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கென வடக்கு - கிழக்கு அவசர புனர்வாழ்வுத் திட்டம் (நீரப் - NEERP) 50 லட்சம் ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளது.

உள்ளூராட்சித் திணைக்கள வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

வலி.கிழக்கு (நீர்வேலி) பிரதேச சபைத் தலைமைச் செயலகத்துக்கான நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கும் மேலும் 50 லட்சம் ரூபாவினை 'நீரப்' ஒதுக்கீடு செய்துள்ளது.

பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து அதற்கான நிரந்தரக் கட்டடம் யாழ். நகரின் மத்தியில் ரெலிகொம் நிறுவனத்துக்கு சமீபமாக அமைக்கப்படவுள்ளது. இதற்கென 5 பரப்புக் காணியை யாழ். செயலகம் வழங்கியுள்ளது.

இரண்டு அலுவலகங்களுக்கும் நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கான ஆரம்பப் பணிகள் தற்போது தொடங்கப்பட்டுள்ளன.

(ம-6)

### 'றான்' மோசடி தொடர்பான வழக்கில்

# காசோலைகளின் மூலப்பிரதிகளை பொலீஸிடம் ஒப்படைக்கப் பணிப்பு!

யாழ்ப்பாணம்,ஓக.7

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையால் (றான்) குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட புனர்நிர்மாணப் பணிகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் தொடர்பான விசாரணைகளுக்கென மக்கள் வங்கி, ஸ்ரான்லிக் கிளையின்மூலம் பணப் பரிமாற்றம் செய்யப்பட்ட 17 காசோலைகளின் மூலப் பிரதிகளைக் குற்றப்புலனாய்வுப் பொலீஸாரிடம் ஒப்படைக்குமாறு யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

2000ஆம் ஆண்டுமுதல் 2002ஆம் ஆண்டுவரையான காலப் பகுதியில் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையால் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட 14 கட்டடங்களின் கட்டுமானப் பணிகளில் சிலவற்றில் மோசடிகள் இடம் பெற்றதாகக் கூறப்படும் வழக்குத் தொடர்பான விசாரணைகள் நேற்று யாழ். நீதிமன்றத்தில் நடைபெற்றன.

கொழும்பு குற்றவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி என்.சந்திரதாஸ நேற்று நீதிமன்றில் மேலதிக அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தார். அதில் காசோலைகளின் மூலப்பிரதிகளை விசாரணைக்காகத் தம்மிடம் ஒப்படைக்கவேண்டும் என்று வங்கிக்கு உத்தரவிடும்படி கேட்டிருந்தார். அதனை அடுத்து மக்கள் வங்கியின் ஸ்ரான்லிக் கிளையூடாகச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான 17 காசோலைகளின் மூலப்பிரதிகளை குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்குமாறு வங்கிக் கிளை முகாமையாளருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

வழக்கு விசாரணைகள் ஒக்ரோபர் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

(ம-5)

# சாதகமானபதில் இல்லையேல் நாடாளுமன்றம் முன்பாக மறியல்

### காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் பிரதமருக்கு கடிதம்

யாழ்ப்பாணம்,ஓக.7

வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பாக அன்னையர் முன்னணியும் பாதுகாவலர் சங்கமும் இணைந்து இலங்கை நாடாளுமன்றத்தின் முன்பு மறியல் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளன.

மேற்படி இரு அமைப்புகளும் இணைந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்று அனுப்பியுள்ள நினைவூட்டல் கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 96 ஆம், 97 ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போன எமது உறவுகள் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக கடந்த பெப்ரவரி மாதம் நாங்கள் உங்களைச் சந்தித்தோம்.

அப்பொழுது உங்களின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் எமது பிரச்சினைகள் தொடர்பாக முன்னாள் இராணுவத் தளபதி பிரிகேடியர் ஜானக பெரேராவுடன் கதைத்து விட்டு 3 மாதங்களுக்குள் நல்லதொரு பதிலைத் தருவதாகக் கூறியிருந்தார்.

ஆனால், 6 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இன்னும் எமக்கு எதுவித பதிலும் வழங்கப்படவில்லை.

அன்று உங்களைச் சந்திப்பதற்கு எம்முடன் வந்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும் இப்பொழுது இது விடயத்தில் மௌனமாக இருக்கிறார்.

7வருடங்கள் ஆகியும் தமது உறவுகளின் நிலை பற்றி எதுவும் தெரியாத பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் நோயாலும், விரக்தியாலும் நொந்து நூலாகிப் போய்விட்டனர்.

எனவே, இதுவிடயத்தில் தாங்கள் எமக்கு நல்லதொரு பதிலைப் பெற்றுத்தரவேண்டும் என்று முன்பு கூறியதை நினைவுபடுத்தும் முகமாக எமது கடிதத்தை அனுப்பி வைத்துள்ளோம்.

தங்களிடம் இருந்து இதற்கும் பதிலேதும் கிடைக்காது விட்டால் தென்னிலங்கை மற்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து நாடாளுமன்றத்தின் முன்பு மறியற் போராட்டத்தில் ஈடுபடத்தீர்மானித்துள்ளோம். இதற்காக அவர்களின் சம்மதத்தையும் பெறவுள்ளோம் - என்றுள்ளது.

(ம-10)

# இந்திய மீனவர் விசாரணை 15ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.7

யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நான்கு இந்திய மீனவர்கள் தொடர்பான வழக்கு விசாரணை மீண்டும் எதிர்வரும் 15ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று யாழ். மாவட்ட மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

மீனவர்களைக் கைதுசெய்த காரைநகர் கடற்படையைச் சேர்ந்த நான்கு பேர் நீதிமன்றத்துக்கு சமுகமளித்திருந்தனர். அவர்களில் முதலாம் சந்தேக நபரிடம் வாக்குமூலங்கள் நேற்றுப் பதிவுசெய்யப்பட்டன. ஏனைய மூவரையும் எதிர்வரும் 15ஆம் திகதிமுதல் 19ஆம் திகதிவரை நடைபெறும் விசாரணையின் போது வாக்குமூலமளிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதனையடுத்து இந்த விசாரணைகளை எதிர்வரும் 15ஆம் திகதி ஒத்திவைத்த நீதிவான் சம்பந்தப்பட்ட நான்கு மீனவர்களையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை - இந்திய மீனவர்கள் சார்பாக வழக்கு விசாரணைகளில் ஆஜராக இந்திய தூதரகம் சட்டத் தரணி ஒருவரை அனுப்பிவைப்பதாக யாழ். மேல் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்த போதும் அவ்வாறு யாரும் அனுப்பிவைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-5)

**நாளை**

ஆடி 23
வெள்ளிக்கிழமை
(08.08.2003)
திதி : ஏகாதசி
பிற்பகல் 4.59 வரை
நட்சத்திரம்: கேட்டை
முற்பகல் 11.27 வரை
ஏகாதசி விரதம்
வரலக்ஷ்மி விரதம்
சுபநேரம்: 6.04 - 7.34
ராகுகாலம்: 10.34-12.04
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

வாழ்ந்து கெட்ட மனிதர் சிலர். பேசிக் கெட்ட மனிதரோ பலர். ஆகவே, முதலில் காப்பாற்றப் பெறவேண்டுவது நாக்கு!

# காணாமற்போன தபாலக ஊழியர் குடும்பத்துக்கு நிலுவையுடன் சம்பளம்

யாழ்ப்பாணம்,ஓக.7

படையினரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் காணாமற்போன யாழ். தபாலக ஊழியரின் குடும்பத்துக்கு அந்த ஊழியரின் சம்பளத்தையும் நிலுவையையும் வழங்குவதற்கு தபால் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த 7 வருடங்களுக்கு முன்னர் படையினரால் கைதுசெய்யப்பட்ட பின் காணாமற்போன யாழ். மவுண்கார்மேல் வீதியைச் சேர்ந்த பற்றிக் மேரி ரவி (வயது-29) என்பவரின் குடும்பத்துக்கே 1996ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்தான சம்பளநிலுவை மற்றும் சம்பளம் என்பன வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பாக காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் மேற்கொண்ட முயற்சிகளை அடுத்தே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(ம-9)

# பேரலியோ சொட்டு மருந்து வழங்கும் தினங்கள் அறிவிப்பு

சண்டிலிப்பாய்,ஓக.7

இந்த ஆண்டுக்கான போலியோ சொட்டுமருந்து வழங்கும் தினங்கள் செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதியும் ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதியும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு தினங்களிலும் வடக்கு - கிழக்கில் உள்ள ஐந்து வயதுக்கு உட்பட்ட சகல குழந்தைகளுக்கும் போலியோ சொட்டுமருந்து வழங்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் யாவும் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி குடும்ப சுகாதார சேவை அலுவலர்களால் சுகாதாரத் தொண்டர்களின் உதவியுடன் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுதோறும் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

(ம-10-135)



## வதிரி, காளையயன் தோட்டம்
## அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோவில்



# சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்பிதழ்

07.08.2003

### வாழ்த்துரை


தமிழ் வேதம் தந்த திருமூல நாயனாரால் சிவ பூமி என போற்றப்பட்டதும், திருவருட் செல்வர்களால் புண்ணிய பூமி என்று பாடப்பெற்ற திருத் தலங்கள் அமைந்த ஈழத்திரு நாட்டின் யாழ்ப் பாணத்து வடபகுதி வடமராட்சி. வதிரி காளையன் தோட்டத்தில். தல விருட்சமான வன்னி மரமும் வேம்பும் புடை சூழ பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு எம் மூதாதையர்களால் ஸ்தாபிக்கப்பட்டது மான ஸ்ரீ முத்துக்குமாரசுவாமிக்கு அழகான புதிய சித்திரத் தேர் ஒன்று செய்ய நினைத்து அக்காரியத்தைச் செவ்வனே நிறைவேற்றி உள்ளார்கள். இன்றைய பொன்னாளில் இறைபக்தி உடையவர்களாய் எல்லோரும் சீரும் சிறப்புடன் வாழ வேண்டும் என எங்கள் முத்துக்குமாரனை வேண்டி நிற்கிறேன்.

**இ.சிவசிதம்பரம்**
**உதவி பொது முகாமையாளர்,**
**மக்கள் வங்கி, கொழும்பு.**

### ஆலய குருக்களின் ஆசியுரை

வதிரி காளையன் தோட்டத்து அருள்மிகு ஸ்ரீ முத்துகுமாரசுவாமிக்கு அழகிய திராவிட அமைப்பில் சித்திரத்தேர் எம்பெருமானின் அரும் பெரும் கருணையினால் அமையப் பெற்று அதன் வெள்ளோட்ட விழா இன்று 07.08.2003 இல் நடைபெறுகிறது. இந்த ஆலயத்தில் இந்த வருட மகோற்சவ குருவாக யான் பங்கேற்கும்போதே இச் சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா சிறப்புற நடைபெற்று அடியார்கள் இறை அருள் பெற்றுய்ய முத்துக்குமாரரின் தாள் பணிகிறேன். "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்ற திருவாக்குப் படி முருகனருளால் இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க என ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

**ஆலய மகோற்சவ பிரதம குரு**
**சிவஸ்ரீ பால.சோமசுந்தரக் குருக்கள்.**



### ஆதீன முதல்வரின் அருளாசி

வதிரி காளையன் தோட்டத்து முத்துக்குமாரரின் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். இத் தேரைப் பல சித்திர வேலைப்பாடுகளுடன் உருவாக்கியுள்ள சிற்பக் கலைஞர்களை வாழ்த்துகின்றேன். அத்துடன் தேர்த் திருப்பணிச் சபையினரையும் வாழ்த்துகிறோம். இவ்விழா சிறப்புற நடைபெற்று அனைவருக்கும் இறையருள் கிடைக்க முத்துக்குமாரனின் திருவடியை வணங்கி நிற்கிறோம்.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாசார்ய சுவாமிகள்**
**-2ஆவது குருமஹாசந்நிதானம்**
**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்**

### ஸ்தபதியின் பிரார்த்தனை

எங்கும் பிரகாசமாகி ஆண்டருள் புரியும் முத்துக் குமாரனை மனதில் இருத்தி, அவருக்கு நாம் உருவாக்கிய அழகிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் இன்று சிறப்புற நிகழ இருகரம் கூப்பி அவன் தாள் பணிகின்றோம்.

**தேர் நிர்மாணிப்பு: தேவரத சிற்பமணி, சிற்ப சோதி**
**திரு.சு.இராசரத்தினம்**
**அவர்களின் தலைமையிலான**
**திருநெல்வேலி தலங்காவல் விநாயகர்**
**சிற்பாலய கலைஞர்கள்**

### அருள் மிகு ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஒளி தந்து வழிகாட்டுவான்

உண்மை உலகில் என்றும் நிலைத்திருப்பது போல தூய்மை உள்ளத்துடன் செய்யும் ஆலயப் பணிகளும் அவற்றின் விளைவுகளும் தொடர்ந்து கொண்டு இருப்பதை நாம் காண முடிகிறது. ''நீவீர் கவலையடைய வேண்டாம். இங்கிருந்து வேலொன்றினைக் கொண்டு சென்று உமது ஊரில் வழிபடுவீர்'' எனக் கூறிய கதிர்காமக் கந்தனின், காளயன் தோட்டத்து முருகன் அடியவர்கள், அருள் வாக்கினை நிறைவேற்ற திருவுள்ளம் கொண்டனர். தல விருட்சமான வன்னிமரமும் வேம்பும் புடை சூழ வதிரி காளையன் தோட்டம் எனும் இடத்தில் பிரதிஷ்டை செய்தனர். இதனைக் கோயிலாக ஆரம்பித்தவர்களால் 31.11.2000 ஆம் ஆண்டில் கொடித்தம்பம் நாட்டப்பட்டு – 05.06.2001 இல் அச்சுக் கோப்பு வைபவமும் நடைபெற்று இன்று 07.08.2003 இல் அழகான புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெற முருகனின் அருள் பாலித்துள்ளது:

*"முத்துக்குமாரரின் வடம் பிடித்தால்*
*வல்வினைகள் அகன்றிடுமே"*

தேர்த்திருப்பணி வேலை ஆரம்பித்து எவ்வளவோ இன்னல்கள், இடைஞ்சல்கள், துன்பங்கள் துயரங்கள் மத்தியிலும், விடாமுயற்சியாக, சிக்கனமாகவும் அழகாகவும் இந்தப் பணியைத் தேர்திருப்பணிச் சபையினர் நிறைவேற்றியுள்ளனர். நாங்கள் இத்திருப்பணியை எப்படி முடிப்பது என்று யோசிக்கும் போது, எங்களுக்கு, நிதியும் மூலப்பொருள்களும் அள்ளி வழங்கிய அடியார்களுக்கு தனித்தனி நன்றி சொல்லாததற்கு மன்னிப்புக் கேட்டு – எல்லோரும் எல்லாம் கிடைக்கப்பெற இறைவன் அருள் வேண்டி நிற்கின்றோம்.

அடியார்களே,
எதிர்வரும் ஆடி 25ஆம் நாள் (10.08.2003) ஞாயிற்றுக்கிழமை. காலை 09.45 மணிக்கு புதிய சித்திரத் தேரில் முத்துக்குமாரன் பவனிவரும் அருட்காட்சியினைக் கண்டு தரிசித்து அருள் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

*எழுமின் விழிமின் கருதிய கருமம்*
*கை கூடும் வரை சலியாது உழைமின்.*

**ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி கோயில்,**
**காளையன் தோட்டம்,**
**வதிரி தேர்த்திருப்பணிச்சபை**

(21051)

## வெள்ளோட்ட விழா சிறப்புற வாழ்த்துவோர்:

புதிய சீமாட்டி புடைவையகம்
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

சிவம்ஸ் புடைவையகம்
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

கருணா பல்பொருள் வாணிபம்
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

சிங்கம்ஸ் வர்த்தக நிலையம்
இல. A2,
நவீன சந்தை,
நெல்லியடி.

கிருஷ்ணானந்தன் பலசரக்குக்கடை
01,
மத்திய சந்தை,
நெல்லியடி,
கரவெட்டி.

மெட்றோ வைன் ஸ்ரோர்ஸ்
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.

கலைவாணி கண்ணாடிக் களஞ்சியம்
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

குகரதி புடைவையகம்
பிரதான வீதி,
நெல்லியடி.

சகுந்தலா புடைவையகம்
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

ஹப்பி ரெக்ஸ்ரைல்
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

சீறோ சுப்பர் கொம்பிளக்ஸ்
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.

லக்ஸ்மி ஸ்ரோர்ஸ்
மத்திய சந்தை,
நெல்லியடி,
கரவெட்டி.

இனப்பிரச்சினைத் தீர்வு எட்டப்படும்வரை

# வடக்கு - கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவே இடைக்கால நிர்வாகசபை

## இராணுவத்தினருடனான சந்திப்பில் அமைச்சர் மொறகொட

கொழும்பு,ஓக.7

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு எட்டப்படும் வரை வடக்கு - கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காகவே இடைக்கால நிர்வாக சபையை உருவாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்தமொறகொட.

கடந்த சனியன்று வவுனியாவிற்கு விஜயம் செய்த அமைச்சர், பாதுகாப்புப் படை வீரர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும் இராணுவ வீரர்களுடன் கலந்துரையாடும் நோக்கிலும் அமைச்சர் மொறகொட இந்த விஜயத்தை மேற்கொண்டிருந்தார். ஓமந்தை முன்னரங்கக் காவலரண்களில் கடமைபுரியும் இராணுவ வீரர்கள் எதிர்நோக்கும் சிரமங்களையும் இந்த விஜயத்தின் போது அமைச்சர் ஆராய்ந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை மேற்கொண்டாலும் அரசு பாதுகாப்புப் படையைப் பலப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் அங்கு கூறினார்.

சமாதான நடவடிக்கைகள் குறித்து இரு இனத்தவர்களுக்கும் இன்னும்



தெளிவுபடுத்தப்பட வேண்டும். நாம் விடுமுறையில் வீடுகளுக்குச் செல்லும போது எமது பெற்றோர்கள் மீண்டும் யுத்தம் தொடங்கிவிடுமா என்று கேள்வி எழுப்புகின்றனர். நேரடியான பதில்கள் கிடைத்தால் இரு தரப்பினருக்கும் தெளிவுபடுத்த முடியும் என அங்கு இராணுவ வீரர்கள் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் மொறகொட, தற்போதைய நிலையிலேயே நாம் பேச்சுக்களில் கலந்து கொண்டோம். ஒரு நிலையில் புலிகள் விலகிக்கொள்வதாக அறிவித்தனர். அபிவிருத்தி நடவடிக்கைகள் சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டவில்லையென அவர்கள் தெரிவிததனர். அதனால் இதற்குத் தேவையான யோசனைகளை அரசாங்கம் நோர்வே ஊடாக விடுதலைப் புலிகளுக்கு சமர்ப்பித்துள்ளது. இடைக்கால நிர்வாக சபை தொடர்பான யோசனைகளே இவை. இதில் இராணுவம், பொலீஸ் அதிகாரங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

தற்போதைய பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் நீடிக்கும். இந்த முறையின் கீழ் எவ்வித மாற்றங்களும் இந்த நடவடிக்கைகளில் மேற கொள்ளப்படமாட்டா. அபிவிருத்தி பொருளாதாரக் கொள்கைகளை முனனெடுத்துச் செல்லும் நோக்கிலேயே இந்தக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுகின்றது. நடைமுறையில் இந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு மாகாண சபைகளைப் போல உருவாக்கப்படவில்லை. அதனால்தான் இந்த நிலைமையை மாற்ற தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றோம் - என்று கூறினார்.

(ம)

## நிதி உதவி

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்துக்கு அதன் பழைய மாணவர் ஒருவரால் ஒரு லட்சம் ரூபா நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியின் மூலம் பாடசாலையின் மேற்குப்புற எல்லைக்கு மதில் கட்டப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

சுவிஸ்ஸர்லாந்தில் இருந்து அண்மையில் வருகைதந்துள்ள இராசரத்தினம் விக்னராஜா என்ற பழைய மாணவரே மேற்படி நிதியை வழங்கியுள்ளார். (ம-10-150)

## செயலமர்வு

வலிகாமம் கல்வி வலய விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று காலை 8.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-10-150)

# இலட்சத்துக்கும் அதிகமானோர் இம்முறை கதிர்காம பாதயாத்திரை

### அமெரிக்க துறவிக்கு இது 16ஆவது வருடம்

காரைதீவு,ஓக.7

வரலாறு காணாதவகையில் இம்முறை லட்சத்திற்கும் அதிகமானோர் கதிர்காம பாத யாத்திரையில் ஈடுபட்டனர். அமைதிச் சூழலே இதற்குப் பிரதான காரணமாகும். இப்பாத யாத்திரையில் தமிழர்கள் மாத்திரமல்லாமல் சிங்களவர்களும், முஸ்லிம்களும் கலந்துகொண்டனர். எமது பயணத்தின்போது மூவின மக்களும் வாஞ்சையோடு வரவேற்று உபசரித்தனர்.

- இவ்வாறு பாதயாத்திரைக்கு தலைமைதாங்கிய அமெரிக்க துறவி பற்றிக் ஹரிகன் தெரிவித்தார்.

1988ஆம் ஆண்டிலிருந்து பாதயாத்திரையிலீடுபடும் இவர், இம்முறை 16 ஆவது தடவையாக அப்பணியைச் செய்துள்ளார். இவர் தலைமையிலான குழுவில் 760பக்தர்கள் கலந்துகொண்டு கதிர்காமம் சென்றடைந்துள்ளனர்.

கதிர்காமத்திற்கு கால்நடையில் இறுதியாகச் செல்லும் யாத்திரிகர்குழு நேற்று புதன்கிழமை உகந்தையிலிருந்து புறப்பட்டது.

கதிர்காம ஆலய தீர்த்தோற்சவம் எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெறும். அதற்கு முன்பாக காட்டினுள் 7நாள் பயணிக்க வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணத்திலிருந்து தினமும் கதிர்காமத்திற்கு பக்தர்கள் செல்லத் தொடங்கியுள்ளனர். வாகனத்தை வாடகைக்கு அமர்த்தியும், போக்குவரத்துச்சபை வாகனங்களிலும் செல்வதைக் காணக்கூடியதாய் உள்ளது. நியூசஸ்டன் பஸ் கம்பனியின் சாலைகள் படிப்படியாக கதிர்காமத்திற்கான பஸ் சேவைகளை அதிகரித்து வருகிறது.

கால்நடையாகச் சென்றோர் பெரும்பாலானோர் திரும்பிக்கொண்டிருக்கின்றனர். இம்முறை தண்ணீர் பிரச்சினை இல்லையென்று கூறப்படுகிறது.

கடந்த இருபது வருடங்களின் பின்னர் இம்முறை உகந்தை முருகன் ஆலயம் வரலாறு காணாத வகையில் களைகட்டியிருக்கிறது.

பொத்துவிலையடுத்துள்ள பாணமையிலிருந்து 13மைல் அடர்ந்த காட்டுப் பாதையினூடாகச் சென்றால் இந்த உகந்தை முருகன் ஆலயம் வரும்.

கதிர்காமத்திற்குக் கால்நடையாகச் செல்வோர் உகந்தை முருகன் ஆலயத்தில் ஒருசிலநாள் தங்கி ஓய்வெடுத்துச் செல்வது வழமையாகும்.

ஆலய வளாகத்தில் பொலீஸ் பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

(ம)

# சமத்துவம், சுயகௌரவம் ஆகியவற்றுடன் ஊனமுற்றோர் வாழ வழிசெய்யவேண்டும்!

## சுகாதார அமைச்சர் கோரிக்கை

உடல் ஊனமுற்றவர்களையும் சமுதாயத்தில் ஓர் அங்கமாகக் கொண்டு அவர்கள் சமத்துவமாகவும், சுயகௌரவத்துடனும் வாழ நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். ஊன



நாடாளுமன்றிலிருந்து...

முற்றோர் என ஒதுக்கிவிடாமல் அவர்களையும் கௌரவிக்கும் மனப்பக்குவம் ஏற்படவேண்டும்.

- இவ்வாறு சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

உடல் ஊனமுற்றவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் திருத்தச் சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் தயாரத்ன இதனைக் குறிப்பிட்டார்.

அமைச்சர் தயாரத்ன மேலும் கூறியதாவது:-

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் ஊனமுற்றவர்கள் பெரிதும் மதிக்கப்படுகின்றனர். ஊனமுற்றவர்களுக்கு ஆரம்பம் முதலே ஏற்ற கல்வியும், தொழில் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. அதற்கேற்ப தொழில் வாய்ப்புகளும் அளிக்கப்படுகின்றன. இதனால், ஊனமுற்றவர்களும் சுய உழைப்பில் கௌரவமாக வாழ்கின்றனர்.

ஆனால், எமது நாட்டில் ஊனமுற்றவர்கள் தீண்டத்தகாதவர்கள் போன்று ஓரங்கட்டப்படுகின்றனர். இந்த நிலைமையை மாற்றி அமைக்க வேண்டும்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் சமூக சேவைகள் அமைச்சர் பொருத்தமான இந்தத் திருத்தச் சட்டத்தை முன்வைத்துள்ளார்.

இந்தச் சட்டத்தின் மூலம் ஊனமுற்றவர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கமுடியும்.

தனியான சட்டத்தின் மூலமோ அல்லது அரசின் மூலமோ இதனைச் செயற்படுத்திவிடமுடியாது. மனிதநேய அமைப்புகளும், தொண்டர் நிறுவனங்களும் பொதுமக்களும் இதற்கு உதவ வேண் டும்.

- இவ்வாறு சுகாதார அமைச்சர் கூறினார்.

# தொலைபேசிக் கட்டண உயர்வுக்கு எதிர்க்கட்சித் தலைவர் கண்டனம்



தொலைபேசிக் கட்டணத்தை உயர்த்துவதன் மூலம் மக்களை மேலும் கஷ்டத்துக்குள்ளாக்கும் அரசின் செய்லை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் விடுத்துள்ள ஊடகச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

நாம் ஆட்சியில் இருந்த காலத்தில் தொலைபேசி இணைப்புகள் அதிகரித்தன. ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட புதிய இணைப்புகளும் வழங்கப்பட்டன.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த ஒன்றரை வருட காலத்தினுள் குடிதண்ணீர், மின்சாரம் முதலானவற்றின் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன. தற்பொழுது வீடுகளுக்கான தொலைபேசி வாடகைக் கட்டணம் 354 ரூபாவினாலும், வர்த்தக நிலையங்களுக்கான கட்டணம் 940ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது நியாயமற்றதாகும்.

சம்பள உயர்வு, மேலதிகக் கொடுப்பனவு முதலானவற்றை அரசு அதிகரிக்கவில்லை. அதிகரிக்கப்பட்ட தொலைபேசி வாடகையை உடன் வாபஸ் பெறுமாறு அரசைக் கேட்டுக்கொள்கின்றோம்.

- இவ்வாறு ஊடகச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அங்கவீனர்களின் நலன் காப்பதற்கு புதிய காப்புறுதித் திட்டம் உருவாக்குக!

### நாடாளுமன்றத்தில் தினேஷ் குணவர்த்தன எம்.பி. வேண்டுகோள்

நாடெங்கிலும் உள்ள அங்கவீனமானவர்களின் அடிப்படை உரிமைகளையும் அத்தியாவசியத் தேவைகளையும் நிவர்த்தி செய்யும் வகையில் தேசிய காப்புறுதித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அதே வேளை, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட பாதிப்புகளால் அங்கவீனமானவர்களுக்கான நிவாரண உதவிகள் துரிதமாக வழங்கப்படவேண்டும்.

- இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரான தினேஷ் குணவர்த்தன எம்.பி. நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுததார்.

சமூகசேவைகள் அமைச்சர் ரவீந்திர சமரவீரவினால் சமர்ப்பிக்கப்பட்ட அங்கவீனமுற்றோரின் உரிமைகள் பாதுகாப்புத் திருத்தச்சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே தினேஷ் குணவர்த்தன எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

எமது நாட்டில் ஒவ்வொரு நூறு நபர்களுக்கும் தலா இருவர் என்ற ரீதியில் அங்கவீனர்கள் இருக்கின்றனர். உடல் உறுப்புகள் மட்டும் அல்லாமல் உளரீதியாக ஊனமுற்றவர்களும் இருக்கின்றனர்.

நலன்புரி முகாம்களில் உள்ள இப்படியான அங்கவீனர்களுக்கு அரசு நாள் ஒன்றுக்கு 30 ரூபா மட்டுமே வழங்குகின்றது. இத்தொகை அதிகரிக்கப்பட வேண்டும்.

அங்கவீனர்களை ஓரங்கட்டி விடாமல் அவர்களுக்கான தொழில் பயிற்சி, கல்வி வசதி என்பனவற்றை வழங்க வேண்டும். அரச நியமனங்களில் ஆகக குறைந்தது மூன்று வீதமாவது அங்கவீனர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இராணுவ வீரர்களுக்கான "ரணவிரு" நலன்புரித் திட்டத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்தினார். ஆனால், இப்போது அத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

ஊனமுற்ற படைவீரர்களுக்கான பதவி உயர்வுகளும், சம்பள உயர்வுகளும் இப்போது இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இவற்றை அரசு மீள் பரிசீலனை செய்யவேண்டும். அவர்களுக்கான சம்பள உயர்வுகளையும் பதவி உயர்வுகளையும் மீண்டும் வழங்கவேண்டும்.

இதேபோன்று வடக்கு - கிழக்கு மாகாணங்களிலும் பல ஆயிரக்கணக்கானோர் அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நலன்புரி, புனர்வாழ்வு ஆகிய நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் ஜெய்ப்பூர் கால்களையும், கைகளையும் பொருத்திக் கொள்வதற்கு அரசு நிதி உதவிகளை வழங்க வேண்டும்.

அங்கவீனர்களும் சமூகத்தில் மதிக்கப்பட வேண்டும். இவர்களின் பாதுகாப்புக்கென தேசிய மட்டத்தில் காப்புறுதி திட்டம் ஒன்றையும் உருவாக்க வேண்டும்.

- இவ்வாறு தினேஷ் குணவர்த்தன எம்.பி. கூறினார். (ம)

# பிரதமரின் சீன விஜயத்தின் பின்னர் முதலீடு அதிகரிக்கும் என நம்பிக்கை

கொழும்பு,ஓக.7

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின சீன விஜயத்தின் பின்னர் பெருந்தோட்டத்துறை, வர்த்தக மற்றும் முதலீடுகள் அதிகரிக்கும் என்று பெருந்தோட்டத்துறை அமைச்சர் லயனல் கிரியெல்ல தெரிவித்தார். பெருந்தோட்டத்துறையில் முதலீடு செய்வதற்கு பாரம்பரியமற்ற முதலீட்டாளர்களை ஈர்த்துக்கொள்ள அரசு விசேட கவனம் செலுத்தி வருகிறது. இவற்றுள் சீனா முக்கிய இடத்தை வகிக்கின்றது. உலகின் தேயிலை உற்பத்தியில் சீனா இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. தேயிலை உற்பத்தியில் சீனா நவீன தொழில் நுட்பங்களையும் புகுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றது. சீனாவில் மத்திய தர றப்பர் உற்பத்திகள் பிரபலமடைந்துள்ளதால றப்பர் பொருள்களின் தயாரிப்பிலும் இறக்குமதியிலும் சீனா முன்னணி வகிக்கின்றது. பிரதமரின் சீன விஜயத்தில வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ உட்பட 14 பேர் பங்கு கொள்கின்றனர்.

(ம)

# இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு 18 ஆம் திகதி வருவார்

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சின்ஹா எதிர்வரும் 18ஆம் திகதி உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வருகிறார். கொழும்பில் ஒரு சில தினங்கள் தங்கியிருக்கும் அவர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ ஆகியோர் உட்பட அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேச உள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சின்ஹாவின் இலங்கைக்கான இந்த விஜயம் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகக் கருதப்படுவதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# ‘சீ.ஏ.ஐ’யின் பங்களாதேஷ் கிளை வர்த்தக வங்கியினால் கொள்வனவு

பங்களாதேஷ் நாட்டில் சீ.ஏ.ஐ. (C.A.I) வங்கியின் செயற்பாடுகளை மேற்கொள்ளும் விதத்தில் வர்த்தக வங்கியும் சீ.ஏ.ஐ.நிறுவனமும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இதன் பிரகாரம், பங்களாதேஷின தலைநகர் டாக்காவில் உள்ள சீ.ஏ.ஐயின் தலைமை அலுவலகத்தையும், சிட்டாகொங்கிலுள்ள கிளை அலுவலகத்தையும் மேலும் இரண்டு சாவடி நிலையங்களையும் வர்த்தக வங்கி கொள்வனவுசெய்யும்.

இது தொடர்பான சீராக்கல்கள் முடிவுற்றதும், இவற்றின் விற்பனையையும் கொள்வனவையும் முடித்துவைக்கும் ஒப்பந்தங்கள் டாக்காவில் வைத்துக் கைச்சாத்தாகும் இந்தக் கொள்வனவினால் பங்களாதேஷ் வங்கி ஒரு முழு அளவிலான கிளைச் செயற்பாடுகளை மேற்கொள்ளும். வர்த்தகவங்கி பங்களாதேஷ் மரபுகளைச் சார்ந்து செயற்படும்.

“சீ.ஏ.ஐ - கிறடிற் அக்கிறிகோலே இன்டோ சுவிஸ் நிறுவனம் தனது பங்களாதேஷ் கிளையை விற்பனை செய்ய விரும்புவது சர்வதேச வலையமைப்புடன் கூடிய பாரியதோர் ஐரோப்பிய மொத்தவிற்பனை வங்கியாக தன்னை உலகரீதியாக் மீள நிலை நிறுத்திக் கொள்ளும் திட்டத்துடனேயே ஆகும்.

“இதன்மூலம் பாரிய கூட்டு நிறுவனங்கள், நிதி நிறுவனங்களுக்கு தமது சேவையை வழங்குவதே அதன் நோக்காக உள்ளது”.

- இவ்வாறு தெரிவித்தார் பங்களாதேஷ் கிளை முகாமையாளர் ஜெராட் மார்சண்ட்.

“1981இல் பங்களாதேஷில் செயற்படத் தொடங்கிய சீ.ஏ.ஐ கிளை அங்கு இரண்டாவது பெரிய வங்கியாகத் திகழ்கிறது. இக்கிளையில் பல நாட்டைச் சேர்ந்தவர்களும் பெரும் வர்த்தக நிறுவனங்களும் வாடிக்கையாளர்களாக உள்ளனர்.

“சார்க் நாடுகளை மையமாகக் கொண்டு தன்னைப் பிராந்திய ரீதியாக வியாபித்துக்கொண்ட வங்கியாக உருவாக்குவதில் கவனம் கொண்டுள்ளது வர்த்தகவங்கி. மேலும் ஆற்றல் மிக்கவர்களான பணியாளர்களையும் அது உள்வாங்கிக்கொள்ள விரும்புகிறது. அதனால்தான் சீ.ஏ.ஐ. கிளை கொள்வனவு செய்கிறது” - என்று வர்த்தக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் அமித்தா குணரத்ன தெரிவித்தார்.

இலங்கைக்கு வெளியே வங்கிச் செயற்பாடொன்றை வர்த்தகவங்கி கொள்வனவு செய்வது இதுவே முதல் தடவை.

## தொழில் வளம்

# ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் ரயர்கள் ‘சியெட்’ நிறுவனம் அறிமுகப்படுத்தும்!

‘சியெட்’ நிறுவனம் இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட ஒரு தொகுதி மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் ரயர்களை அறிமுகம் செய்துள்ளது. அத்துடன் இலங்கையின் மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் ரயர் சந்தையிலும் காலடி எடுத்து வைக்கின்றது.

தரம், பாதுகாப்பு, நீடித்த பாவனை என்பவற்றை நோக்கும் போது ‘சியெட் செகூரா’ என்ற முத்திரை குத்தப்பட்ட இந்த ரயர்கள் இலங்கையில் பாவனையில் உள்ள ரயர்களில் சிறந்தவை என்று அந்நிறுவனம் கூறுகிறது.

ஸ்கூட்டர் ரயர்கள் இரண்டு அளவுகளில் கிடைக்கின்றன. மோட்டார் சைக்கிள்களுக்கென ஐந்து அளவுகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் இரண்டு பிரத்தியேகமாக முகப்புப் பகுதிக்குரிய ரயர்கள்.

ஸ்கூட்டர் மற்றும் மோட்டார் சைக்கிள் ரயர் சந்தையில் ‘சியெட்’டின் பிரவேசமானது, இந்த நிறுவனத்தால் இலங்கையில் சந்தைப்படுத்தப்படும் ரயர் வகைகளின் எண்ணிக்கையையும் அதிகரித்துள்ளது என்று ‘சியெட்’டின் விற்பனை மற்றும் சந்தைப் படுத்துதல பொது முகாமையாளர் அஷ்வின் பதுகோனே தெரிவித்தார்.

வாடிக்கையாளர் செலுத்தும் பணத்துக்கு உரிய பெறுமதியை வழங்குவது என்ற ‘சியெட்’ நிறுவனத்தின் கொள்கையை மேலும் விரிவுபடுத்தும் வகையில் இந்த ரயர்களுக்கான விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. அதிசிறந்த கைத்தொழில தரத்தைப் பேணி அதன்மூலம் வாடிக்கையாளர்கள் செலுத்தும் பணத்துக்குரிய பெறுமதியை வழங்குவது என்ற கொள்கையை நிறுவனம் தொடர்ந்து பேணி வருகின்றது.



இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் 2003ஆம் ஆண்டுக்கான சாதனையாளர் விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பில் இடம்பெற்றது. இந்தியாவில் இலங்கையரினால் நடத்தப்படும் இந்தோஸ்டெயின்லெஸ் பப்டெக் நிறுவனத்துக்கு இந்த நிகழ்வில் தொழில் மேன்மைக்கான தங்க விருது வழ்ங்கப்பட்டது. அந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ந.சிவகுமாரனுக்கு அமைச்சர் கரு.ஜெயசூரிய அவ்விருதினை வழங்குவதைப் படத்தில் காணலாம். ‘இந்தோஸ் டெயின்லெஸ் பப்டெக்’ நிறுவனம் யாழ்ப்பாணத்தில் கடந்த 25வருடங்களாக இயங்கிவரும் புறோமோட்டர்ஸ் ஸ்தாபனத்தினரின் கூட்டு நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.

# குடாநாட்டுக்கு இவ்வருட இறுதிக்குள் மேலும் 25ஆயிரம் மின் இணைப்புகள்

யாழ்.குடாநாட்டுக்கு இவ்வருட இறுதிக்குள் மேலும் 25ஆயிரம் மின் இணைப்புகள் வழங்கப்படவுள்ளன என்று அரசாங்கப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அரசாங்கப் பேச்சாளர் அலுவலகம் இது தொடர்பாக விடுத்துள்ள குறிபபில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சமாதான நடைமுறையின் பின்னர் யாழ். குடாநாட்டுக்கு 60ஆயிரம் புதிய மின்சார இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. குடாநாட்டுக்கான உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் கீழ் மேலும் 25ஆயிரம் மின்சார இணைப்புகள் இவ்வருட இறுதிக்குள் வழங்கப்படவுள்ளன.

சுன்னாகத்திலும், காங்கேசன்துறையிலும் 20மற்றும் 15மெகா வோட் மின்சாரத்தை வழங்கும் இரு ஜெனரேட்டர்கள் உள்ளன. எனினும், குடாநாட்டின் முழுமையான மின்சாரத் தேவை 22மெகாவோட் ஆக இருப்பதால், 13மெகா வோட் மின்சாரம் தற்போது மேலதிகமாக இருப்பதாக இலங்கை மின்சாரசபை கூறுகின்றது.

இதேவேளை -

யாழ்.குடாநாட்டில் உள்ள மின் பாவனையாளர்கள் தமது மின் கட்டணங்களைக் கிரமமாகச் செலுத்தி வருவதாகவும் மின்சாரசபை கூறியுள்ளது.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இடைக்கால நிர்வாக சபையினை எதிர்த்து 3அமைப்புக்கள் பிரசாரம்

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு யோசனைக்கு எதிராக ஜே.வி.பி., சிஹல உறுமய, தேசிய பிக்குகள் முன்னணி என்பன பிரசார இயக்கங்களை ஆரம்பித்திருக்கின்றன. சிஹல உறுமய ஏற்கனவே வீதிப் பிரசாரங்களை ஆரம்பித்திருக்கின்றது. தேசிய பிக்குகள் முன்னணி நேற்று முதல் பிரசாரத்தில் இறங்கியிருக்கிறது. எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை ஜே.வி.பி. பிரசாரத்தில் ஈடுபடவிருக்கிறது.

வீட்டுக்கு வீடு சென்று பிரசாரம் செய்யும், நிதி சேகரிக்கும் திட்டத்தை சிஹல உறுமய தலைவர் திலக் கருணாரத்ன கடந்த 2ஆம் திகதி நுகேகொடையில் ஆரம்பித்தார்.

தேசிய பிக்குகள் முன்னணி துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதன் மூலமும் விகாரைகளில் கூட்டங்களை நடத்துவதன் மூலமும் தனது எதிர்ப்புப் பிரசாரத்தை ஆரம்பித்திருக்கின்றது.

ஜே.வி.பி.யின் எதிர்ப்புப் பிரசாரம் கொழும்பு, கம்பஹா, அம்பாறை, திருகோணமலை, புத்தளம், நுவரெலியா, கண்டி உட்பட 19 மாவட்டங்களில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்படுகிறது.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண் மகிழ 22 - 02 - 1942

கண் நெகிழ 19 - 07 - 2002

**அமரர் சங்கரப்பிள்ளை செல்வநாயகம்**

எம் இதயம் நிறைந்த அப்பாவே!
நாலிரண்டு செல்வங்களை தவிக்கவிட்டு
எங்கு சென்றீர்களோ?
அல்லும் பகலும் உழைத்து
எம்மை வளர்த்தீர்களே!
ஆண்டு ஒன்றென்ன ஓராயிரம்
சென்றாலும் ஆறாது எம்துயரம்
மாறாது எம் துன்பம்

நிரந்தரமுகவரி: *2ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி.*

தற்காலிக முகவரி: *41A, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(21140)(26,12,13,27)



## நான்காவது பிறந்தநாள் வாழ்த்து

07.08.2003

**செல்வன் தயாபரன் சாயிதன்**



அச்சுவேலியைச் சேர்ந்த
**தயாபரன்**
துன்னாலையைச் சேர்ந்த
**யசோதா**
தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

**செல்வன் சாயிதன்**

தனது நான்காவது
பிறந்ததினத்தை சுவிஸில்
உள்ள தனது இல்லத்தில்
இன்று (07.08.2003)
வியாழக்கிழமை
வெகு விமரிசையாகக்
கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, பிரான்ஸில் உள்ள அத்தை, மாமா, மச்சான்மார்-ஹரீஸ், விதுஷ், அச்சுவேலியில் உள்ள அப்பப்பா, அத்தை, மாமா, மச்சாள் நிவேதிகா, பாட்டப்பப்பா, ஜேர்மனியில் உள்ள அம்மம்மா, ஐயா, சித்தி, மாமா, துன்னாலையிலுள்ள உறவினர்கள், அச்சுவேலியில் உள்ள உறவினர்கள் அனைவரும் செல்வன் சாயிதனை காட்டுமலைக் கந்தன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

**சி.தங்கவேல்** (அப்பப்பா).

நாவற்காடு, அச்சுவேலி.

(சி-29339) (13-12-27-24)

# தமிழ் மக்கள் அனைவரும் தமது பெயரை தமிழில் வைக்கவேண்டும்

## அதற்காகவே 'தமிழ் பெயர்க் கையேடு' என்கிறார் தமிழேந்தி

செம்பியன்பற்று,ஓக.7

தமிழ் மக்கள் அனைவரும் தமது பெயர்களைத் தமிழிலேயே வைத்துக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்துடனேயே நாம் இந்த தமிழ்ப் பெயர்க் கையேட்டை வெளியிட்டுள்ளோம்.

- இவ்வாறு தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் செ.வ.தமிழேந்தி கடந்த திங்களன்று கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற 'தமிழ்ப் பெயர்க் கையேடு' நூல் வெளி யீட்டு விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

தமிழர்கள் தமது பெயர்களை தமிழில் வைத்துக்கொள்ளவேண்டுமென்ற நோக்கத்தோடு, 1992 ஆம் ஆண்டு தமிழீழப் பெயர்க் கையேடு ஒன்றை மிகவும் குறைந்த பெயர்களுடன் தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டது. அதன் பின் பெருந்தொகையான பெயர்களுடன் நிறைவான நூலை வெளியிடவேண்டுமென நாம் விரும்பினோம். பொதுவாக மேல் நாட்டவரைப் பொறுத்தவரை அவர்கள் பெயரை வைத்தே அவர்கள் யார் என்பதை கண்டுபிடிக்கமுடியும். ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரையில் அது முடியாத காரியமாகும்.

இந்நிலை மாறி ஓரளவாவது தமிழருடைய பெயரை வைத்து இவர் தமிழரா? என்பதை அறிந்துகொள்ளக் கூடியவகையில் ஒரு நூலை வெளியிட வேண்டும் என விரும்பினோம்.

யாழ்ப்பாண இடபெயர்வின் பின் இந்த நூலை எப்படி ஆக்குவது என எண்ணி அதன் தொடக்க முயற்சிகளை மேற்கொண்டோம். பேராசிரியர் சண்முகதாஸ் அவரது துணைவியார், பண்டிதர் பரந்தாமன், இளங்குமரன் ஆகியோர் இணைந்து இந்த முயற்சியை ஆரம்பித்து நூலை ஆக்கி முடித்துள்ளோம்.

இந்நூல் 4ஆயிரம் பெயர்களைக் கொண்டு வெளிவந்துள்ளது. 1992 ஆம் ஆண்டு ஆரம்பித்த எமது முயற்சி 2003 ஆம் ஆண்டுதான் நிறைவேறியுள்ளது.

நாங்கள் எங்களுடைய விடுதலைப் போராட்டப் பணிக்கிடையே இந்த பணியையும் செய்திருக்கின்றோம்.

தமிழ் அறிஞர்கள் பலர் முன்வருவார்களானால் இப்படிப்பட்ட பல நூல்களை வெளியிடலாம்.

தமிழர்கள் தங்களுடைய பெயரைத் தமிழில் இட்டு தம்மை அடையாளங்காட்ட அதுவழி வகுக்கும் - என அவர் மேலும் தெரிவித்தார்.(ம-36)

# சமாதானம் மீதான நம்பிக்கை 3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது

## கருத்துக் கணிப்பில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.7

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் சமாதான முயற்சிகள் மீதான மக்களின் நம்பிக்கை 3சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக கருத்துக்கணிப்பொன்றிலிருந்து தெரிய வந்துள்ளது.

'மாற்றுக் கொள்கைகளுக்கான மையம்' நடத்திய மூவின மக்கள் கலந்துகொண்ட கருத்துக்கணிப்பில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

ஆயிரத்து 371 பேரிடம் இந்தக் கணிப்பு எடுக்கப்பட்டது. 50.6சதவீத சிங்களவர்களும், 70 சதவீத தமிழர்களும், 66.3சதவீத முஸ்லிம்களும் நடைபெற்றுவரும் சமாதான முன்னெடுப்புகளில் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

20.ஆண்டுகளுக்கு மேலாக நீடிக்கும் இனப்பிரச்சினைக்கு பேச்சுக்கள் தீர்வைத் தருமென்று 87.4சதவத மக்கள் நம்புவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வாக்கெடுப்பில் கலந்துகொண்ட 60சதவீதமானவர்கள், இந்தியாவின் உதவி, பேச்சுக்களில் அவசியம் எனவும், அது ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கும் எனவும் கூறியுள்ளனர். (ம-9-5)

# கசிப்பு வழக்குகளில் 7பேருக்கு 88ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.7

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டு தொடர்பாக ஏழுபேருக்கு எதிராக யாழ் நீதிமன்றம் 88ஆயிரம் ரூபாவை அபராதமாக அறவிட்டுள்ளது.

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த முத்து இந்திரன், கொட்டடியைச் சேர்ந்த சின்னையா யோகராசா, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கனகசபை விஜயகுமார், யாழ்ப்பாணம் அரசடிப் பிள்ளையார் கோயிலடியைச சேர்ந்த சதாசிவம் வசந்தகுமார், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சிங்கராசா ரதீஷன், புதிய செம்மணி வீதியைச் சேர்ந்த செல்லமுத்து குருசாமி ஆகியோரை தலா 10ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 2ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் -

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி விமலராணி என்பவரை 15ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 3ஆயிரம் ரூபா தர்மப்பணமும், வண்ணார் பண்ணையைச் சேர்ந்த பரமநாதன் நித்தியானந்தன் என்வரை 8ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் -

யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா உத்தரவிட்டார். (ம-8)

# மனித உரிமை ஆணைக்குழுவில் நியமனம் குறித்து முறைப்பாடு

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நூலகம் ஒன்றில் பணியாற்றும் நூலக உதவியாளர் ஒருவருக்கு நியமன உறுதிக் கடிதமும், உரிய சம்பள அதிகரிப்பும் வழங்கப்படாமை தொடர்பாக அவர் செய்திருந்த முறைப்பாடு பற்றிய விசாரணையை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகம் நேற்றுமுன்தினம் மேற்கொண்டது.

தனக்கு 1999ஆம் ஆண்டு வழங்கப்பட வேண்டிய நியமன உறுதிக்கடிதமும், உரிய சம்பள அதிகரிப்பும் வழங்கப்படாததையடுத்து நல்லூர் பிரதேச சபையின் செயலாளருக்கு எதிராக நூலக உதவியாளர் ஒருவர் கடந்த மே மா்தம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடொன்றைச் செய்திருந்தார். இது தொடர்பான விசாரணை நேற்று மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நடைபெற்றது.

நூலக உதவியாளர் தனக்கெதிராகச் செய்த முறைப்பாட்டை மீளப்பெற்றால் அவருக்கான நியமன உறுதிக்கடிதத்தையும், சம்பள அதிகரிப்பையும் பெற்றுக்கொடுப்பதற்கு ஆவன செய்வதாக பிரதேச சபையின் செயலாளர் விசாரணைகளின்போது தெரிவித்தார். அதனால், நூலக உதவியாளர் அந்த முறைப்பாட்டை மீளப்பெற சம்மதித்தார். அதனைத் தொடர்ந்து அவருக்கான சம்பள அதிகரிப்பு, நியமன உறுதிக் கடிதம் ஆகியவற்றைப் பெற்றுக்கொடுக்க பிரதேச சபையின் செயலாளர் உறுதியளித்ததாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரி தெரிவித்தார். (ஒ-8)

# சாயி சிந்தனை

## தேடுதல்



இறைவனைத் தேடி அலைபவன் ஒரு முட்டாள். இந்த உலகில் யாராவது தன்னைத்தானே தேடுவார்களா? நீ யாரிடமாவது சென்று நான் எங்கே எனக் கேட்டால், உன்னை உடனே மன நல மருத்துவமனையில் சேர்த்து விடுவார்கள். நீயே தெய்வீகமாயிருக்கும்போது, தெய்வீகமே நீயாக இருக்கும்போது, தேடுவதற்கு என்ன தேவை இருக்கிறது? இறைவனைத் தேடுதல் என்ற வார்த்தைப் பிரயோகமே, பயனற்ற பண்டிதர்களால் உருவாக்கப்பட்ட ஒன்று. அத்தகைய வார்த்தையே தேவையற்றது. உலகியல் பொருள்களைத் தேடலாம். இறைவனைத் தேடுவானேன்? அவன்தான் எல்லா இடத்திலும் நிறைந்திருக்கின்றானே! இந்த நம்பிக்கை மட்டும் உன்னிடம் உறுதியாக இருக்குமானால் இறைவனைக் காணாமல் இருக்கவே முடியாது. உனக்கு நிச்சயம் இறைக்காட்சி தெரியும். ஆனந்தம் நிறையும். ஆகவே, இந்த நம்பிக்கையை உறுதியாகப் பற்றிக்கொள்.

*(சனாதனசாரதி1999-மார்கழி பக்.17)*

### தெய்வீக இசையரங்கில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.7

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினரால் நடத்தப்பட்டுவரும் 'தெய்வீக இசையரங்கு' நிகழ்வில் இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் பிரியங்கன் பாலச்சந்திரனின் புல்லாங்குழலிசை இடம்பெறும். பக்க வாத்தியக்காரர்களாக வயலின் - ஏ. ஜெயராமன், மிருதங்கம் - எஸ்.துரைராசா ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

தொடர்ந்து சரவணன் ஜெயநாதனின் பாட்டுக்கச்சேரி இடம்பெறவுள்ளது. இதில் பக்க வாத்தியக்காரர்களாக வயலின் - ஆர். இராதாகிருஷ்ணன், மிருதங்கம் - சங்கர் ஜெயநாதன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ம-10)

### ஆசிரியர்களுக்கு கருத்தரங்குகள்

வலிகாமம் தெற்கு,ஓக.7

பாடசாலைகளில் போஷாக்கும் சுகாதாரமும் பற்றிய ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் இருதொகுதிகளாக வலிகாமம் கல்வி வலயத்தில் இடம்பெறவுள்ளன.

இம்மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதிவரை ஒருதொகுதியினருக்கும், 11 ஆம் திகதியிலிருந்து 15 ஆம் திகதிவரை மற்றொரு தொகுதியினருக்கும் இக்கருத்தரங்குகள் நடைபெறும்.

இக்கருத்தரங்குகளுக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த சகல ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களும் சமுகமளிக்க வேண்டும் என்றும் -

கலந்துகொள்ளமுடியாமல் இருக்கும் ஆசிரியர்கள் உரிய விளக்கத்தை அளித்து முன்னனுமதியை பெற்றுக் கொள்ளவேண்டுமெனவும் -

வலிகாமம் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-152)

### ஆங்கில மொழிமூல பாடநூல்கள் ஒரு தொகுதி வந்தன

வலிகாமம்தெற்கு,ஓக.7


ஆறாம் ஆண்டில் ஆங்கில மொழி மூல கல்விப் போதனைகளை ஆரம்பித்துள்ள பாடசாலை மாணவர்களுக்கான ஒருசில இலவச பாடநூல்கள் வலிகாமம் கல்வி வலயத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் பாலச்சந்திரன், இவற்றை கொழும்பில் இருந்து எடுத்துவந்து ஒப்படைத்துள்ளார்.

கணிதம், சுகாதாரம், சுற்றாடல் கல்வி ஆகிய பாடங்களுக்குரிய பாடநூல்களே எடுத்து வரப்பட்டுள்ளன. இப்புத்தகங்கள் யாவும் சம்பந்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பங்கிட்டு விநியோகிக்கப்பட உள்ளன. (ம-152)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

ஐந்தாம் திருவிழா



## அபயம் புகுந்துவிட்டோம்

கிரவுஞ்சமெனும் மாயமலைதனைப் பொடிசெய்த
கீர்த்தியைப் பாடிவந்தோம் நல்லூரா!
அரவிந்த மலர்ப்பாதம் அரண்செய வேண்டுமையா?
அபயம் புகுந்து விட்டோம் நல்லூரா!
அரகர சிவசிவ எனப்பாடி வருகின்றோம்
அரவணைத்துக் காப்பாய் வேல்வீரா!
சிரமதில் துயர்சுமந்து இளைத்துவிட்டோம் உனது
திருவடி சுமக்க வந்தோம் மயில் வீரா!
கானலின் பின்சென்ற மான்களைப்போல வெறும்
காட்சிகள் பின்சென்று களைத்துவிட்டோம்
வானவர் நாடுபெற உதவிய நீ இங்கே
வாடுவோர் வாழ்வுபெற அருள்புரிவாய்.

- நிவேதிதா.

## அருளிட வேண்டும் நல்லையப்பனே!

*அண்ணர்க்கு பழமதைக் கொடுத்ததால் – அன்று*
*பழனிமலை தனில் அமர்ந்தனை*
*ஔவைக்கு சுட்டபழம் தந்துமே – அன்று*
*ஆறுமுகமாக நின்றனை*
*மாறுபடு சூரனை மாய்த்துமே – அன்று*
*சேவல் மயிலாகக் கொண்டனை*
*துன்புறும் மக்கள் துயர் நீக்கியே – இன்று*
*அருளிட வேண்டும் நல்லையப்பனே!*

- நயினையான்.

## காட்சி தரும் கதிர்வேலா!

எடுப்பு

*முருகையா வா முத்து குமரா வா*
*முடியாமல் தவிக்கிறேன் முன்னாலே*

தொடுப்பு

*உருகுமய்யா உந்தன் உள்ள முருகுமையா*
*உருகி உருகி தினம் உயிர் வாழ்கிறேன்*

முடிப்பு

*அருகே வருவாயோ எமையாதரிக்க*
*அருளைத் தருவாய் அடியனுக்கே*
*கருணை கொண்டவனே நல்லூரா*
*கருவும் கனிந்திட காட்சி தருவாயே!*

- என்.பிறேமசீலன்.

## மார்க்கமொன்று தா!

முரகரி மருகா முரசதன் முதல்வா
முதிதை யெழவடியார் மனதி லாழ்ந்தவா
முருகு வாய்த்தவா முத்தி சேர்ப்பவா
முரவு படவசுரர் முடியை வென்றவா
மருவி லாள்பவா மலக்கம் தீர்ப்பவா
மறையி லரணவர் மயக்கம் தெளித்தவா
மருகு தமிழது மாட்சி யெய்தவே
மார்க்கம் தா நல்லைப் பதியி லுறைபவா!

- அனலையூர்ச் சேந்தன்.

## உலகம் சுற்றியவனே உன் பாதம் போற்றி

உண்மைக்கு இலக்கணமே உன்பாதம் போற்றி
உலகத்தைச் சுற்றியவனே உன் மயில் போற்றி
ஊமைக்கருள் புரிந்தவனே உன் வேல் போற்றி
ஊர் உலகம்காப்பவனே உன் சக்தி போற்றி
எம்மைக் காப்பவனே உன் சரணம் போற்றி
எம் ஈசன் மைந்தனே உன் சேவல் கொடி போற்றி
ஏழைக்கு அருள் சுரப்பவனே உன் கை போற்றி
ஏமாறாவழி வகுத்தவனே உன் இதழ் போற்றி.

- சி.சிவசெந்தூரன்.

## வண்ணமாய் அருள் தருவாய்!

*தண்மதி போன்றவனே தரணியை ஆள்பவனே*
*விண்ணவர் தலைவனின் வேதனை தணித்தவனே*
*திண்ணமாய் மனமுருகி தினந்தொழும் அடியார்க்கு*
*வண்ணமாய் அருள்தருவாய் நல்லை வேலவனே.*

குகதாசசர்மா - சிவகுமார்.

# பாகிஸ்தான் கிரிக்கெட் குழாமில் மீண்டும் இன்ஸமாம் உல் ஹக்



பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் குழாமில் இன்ஸமாம் உல் ஹக் சேர்க்கப்பட்டுள்ளார்.

33 வயதான இன்ஸமாம், உலகக்கிண்ணத் தொடரில் 6 இன்னிங்ஸ்களில் பங்கு பற்றி 19 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தார். அதன் பின்னர் பாக். அணியில் சேர்க்கப்படவில்லை. எனினும், பங்களாதேஷுடனான போட்டிகளுக்கான 20 பேர் கொண்ட குழாமில் அவர் இடம்பெற்றுள்ளார்.

இது குறித்து பாக். கிரிக்கெட் தேர்வுக்குழுத் தலைவர் அமீர் சொஹைல் கூறுகையில், "உலகக்கிண்ணத் தொடரின் பின்னர் 'இன்ஸி'யை (இன்ஸமாம்) நாம் விலக்கவில்லை. தற்காலிக ஓய்வையே அளித்திருந்தோம்.

அவரது அனுபவத்தின் மூலம் பாகிஸ்தான் அணியின் மத்திய வரிசையை அவர் பலப்படுத்த வேண்டும்.

இப்போது நாம் 20 பேரின் பெயர்களை அறிவிக்கிறோம். ஆனால், எதிர்காலத்தில் சில மாற்றங்கள் செய்யப்படும். மேலும் கூடுதலான வீரர்கள் கருத்திற்கொள்ளப்படுவர்" - என்றார்.

இதுவரை 85 டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றி 6,214 ஓட்டங்களையும் 290 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 8,957 ஓட்டங்களையும் பெற்றவர் இன்ஸமாம்.

மீண்டும் பாக். அணியில் இடம் பெற்றுள்ளமை குறித்து அவர் கருத்துக் கூறுகையில், " பாக். குழாமிற்குத் திரும்பியமை எனக்கு பெரும் நிம்மதியாகவுள்ளது. பாக். அணிக்காக இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்கள் விளையாட விரும்புகிறேன்." - என்றார்.

ஆனால், "டெஸ்ட் போட்டிகளிலும், ஒருநாள் போட்டிகளிலும் 10,000 ஓட்டங்களைக் குவிக்கும் எண்ணமில்லை. அது மிகவும் கடினமான இலக்கு" எனவும் அவர் கூறினார்.

இங்கிலாந்து தர்ஹாம் அணியில் விளையாடுகின்ற வேகப்பந்து வீச்சாளர் சொஹைப் அக்தாரும் இக் குழாமில் இடம்பெற்றுள்ளார்.

# டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து டெரன் கொவ் ஓய்வு பெறுகிறார்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் டெரன் கொவ் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

முழங்கால் காயத்தினால் பாதிக்கப்பட்டிருந்த டெரன் கொவ், ஒரு வருட காலத்தின் பின் தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் தொடரில் பங்குபற்றினார். எனினும், 3இன்னிங்ஸ்களில் 215 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டை மாத்திரமே கைப்பற்றினார்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் அவர் தனது ஓய்வை அறிவித்தார். ஒருநாள் சர்வதேச போட்டிகளில் தொடர்ந்தும் விளையாடுவேன் எனவும் அவர் தெரிவித்தார்.

1994ஆம் ஆண்டில் டெஸ்ட் போட்டிகளுக்கு அறிமுகமான டெரன் கொவ், 58 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 229 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். 86 இன்னிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடிய அவர் 855 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

டெரன் கொவ்வின் அறிவிப்பு குறித்து இங்கிலாந்து கிரிக்கெட் தேர்வுக்குழுத் தலைவர் டேவிட் கிரெனி கூறுகையில், "டெரனின் தீர்மானத்திற்கு மதிப்பளிக்கிறோம். கடந்த இரு தசாப்தங்களாக இங்கிலாந்து அணியின் சிறந்த வீரர்களில் ஒருவராக அவர் இருந்தார் - என்றார்.

இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரிம் லாம்ப் கூறுகையில், " இங்கிலாந்தின் சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவராக டெரன் நினைவு கூரப்படுவார்.

1999ஆம் ஆண்டு சிட்னியில் அவர் ஹெட்ரிக் சாதனை புரிந்தமையும் 2000ஆம் ஆண்டு லோர்ட்ஸில் அவர் பெற்ற அபார பிடியும் மறக்க முடியாதவை" - என்றார்.

# தம்புள்ள கிரிக்கெட் போட்டியில் யாழ். அணிக்கு 2ஆவது வெற்றி

யாழ்ப்பாணம்,ஓக.7

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை 19வயதிற்குட்பட்ட அணிகளுக்கிடையில் தம்புள்ளவில் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் மன்னார் மாவட்ட அணியை வெற்றி கொண்டது. இதன் மூலம் இந்தப் போட்டியில் யாழ். அணி இரண்டாவது வெற்றியைப் பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார் அணி, யாழ். மாவட்ட அணியின் பந்துவீச்சில் திணறியது. இறுதியில் 72 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து சுருண்டது.

யாழ். மாவட்ட அணியின் பந்து வீச்சுச் சார்பாக ச.அகிலன் 27 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், ப.லவேந்திரா 10 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி, இரண்டு விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இவ்வணி சார்பாக யசிந்தன் 11 ஓட்டங்களையும், உமாநாத் மற்றும் லவேந்திரா ஆகியோர் ஆட்டமிழக்காது முறையே 6,38 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதேவேளை -

நேற்றுமுன்தினம் தம்புள்ளவில் நடைபெறவிருந்த வவுனியாவுக்கும் யாழ். மாவட்ட அணிக்கும் இடையிலான போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தால் நடைபெறவில்லை.

(ம-5)

## விளையாட்டு

# போட்டிகளை நடத்த பதிவு செய்த மத்தியஸ்தர்களை அழையுங்கள்

### விளையாட்டுக் கழகங்களுக்கு மாதுளன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஓக.7

யாழ். மாவட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு நடுவர்களைத் தீர்மானிக்கும் போது மத்தியஸ்தர் சங்கத்துக்கு உட்பட்ட நடுவர்களைத் தெரிவுசெய்யுமாறு யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் வி.மாதுளன் சகல விளையாட்டுக் கழகங்களையும் கேட்டுள்ளார்.

அண்மைக்காலமாக பதிவுசெய்யப்படாத மத்தியஸ்தர்கள் விளையாட்டுப் போட்டிகளில் நடுவர்களாகக் கடமையாற்றிவந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில், விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் பிரச்சினைகள் ஏற்படும் போது அவற்றைத் தீர்த்து வைப்பதில் பல்வேறு அசௌகரியங்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

எனவே, எதிர்காலத்தில் இவற்றைத் தவிர்க்கும் நோக்குடன் மத்தியஸ்தர் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்டவர்களை மட்டும் விளையாட்டுப் போட்டிகளுக்கு அழைக்குமாறு வி.மாதுளன் தெரிவித்துள்ளார். (ம-9)

### இந்திய - பாகிஸ்தான் ஜோடி டென்னிஸ் போட்டியில் சம்பியன்

டென்வர் சாலஞ்சர் டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோஹன் போபன்னா - பாகிஸ்தானின் குரோசி ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

இப்போட்டி அமெரிக்காவில் உள்ள டென்வர் நகரில் திங்களன்று நடந்தது. இதில் இந்தியாவின் ரோஹன் போபன்னா - பாகிஸ்தானின் குரோசி ஜோடி அமெரிக்காவின் ஜோஸ் ஹோபி - ஜேஸன் மார்ஷல் ஜோடியை எதிர்த்து ஆடியது.

### உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,ஓக.7

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், யாழ். மாவட்ட முன்னணி உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வதிரி பொம்மேர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் யாழ்ப்பாணம் நாவாந்துறை சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் நவாலி சென்பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன.

(ஒ-86)


ஜப்பான் சைக்கிள்

❑ கியர், ஓட்டோமற்றிக் லைட், கப் பிறேக் போன்ற விசேட அம்சங்களுடன்
பல மொடல்களில் ஜப்பான் சைக்கிள்
❑ வியக்கத்தக்க குறைந்த விலையில் கிடைக்கக்கூடியதும் சுலபமான ஓட்டத்துக்கும் செலவின்றி நீண்டகாலம் பாவிக்கக் கூடியதுமான ஒரு சைக்கிளை வாங்குவதற்கு வாருங்கள்.
❑ புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட கையிருப்பு இப்போது
நாடுங்கள்:

சித்திவிநாயகர் ஜப்பான் சைக்கிள் (B) பசார்
இல.631A, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
(பன்றிக் கோட்டுப்பிள்ளையார் கோயில் அருகில்).
(21143) (32-16-17-31)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் ஆங்கில ஆசிரியையும்
தற்போதைய பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரும்
பழையமாணவர் சங்கப் பொருளாளருமாகிய
திருமதி ஸ்ரீ. ஆனந்தகுமாரசுவாமி
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி ஐயாத்துரை இராஜலெட்சுமி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அமரருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கிறோம்.

- அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா அலுவலர்கள்,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

யாழ்ப்பாணம்.
(சி-29339) (26-16-17-31)


வேலை வாய்ப்பு

இரும்பு கிறில் செய்யக்கூடிய
எலக்ரிக் வெல்டர் தேவை.
வெல்டிங், லேத்மெஷின்
வேலை பழக
விரும்புபவர்களும் தேவை.
தொடர்பு: லிங்கோ
நுண்பட்டறை, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(21142) (26-16-17-31)


## இதய அஞ்சலி



**திருமதி**
**தியாகரராசா பாக்கியம்**

எமது அன்பிற்குரிய திருமதி தியாகராசா பாக்கியம் அவர்களின் மறைவுக்கு இதய அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்; ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

*சிவலிங்கப் புளியடி,*
*யாழ்ப்பாணம்.* (21147) (32-16-17-31) -குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தியாகராசா பாக்கியம்

காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், சிவலிங்கப் புளியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தியாகராசா பாக்கியம் அவர்கள் நேற்று (06.08.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை தியாகராசா அவர்களின் அன்பு மனைவியும் லோகேஸ்வரி, கனகேஸ்வரி, சிறீஸ்கந்தராசா (லண்டன்), சரஸ்வதி, சிவனேஸ்வரி, இராஜேஸ்வரி, சிறீமோகனராசா (தேனு களஞ்சியம் உரிமையாளர்-திருநெல்வேலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற திருச்செல்வம் அவர்களின் அன்புச் சகோதரியும் பரஞ்சோதி (உரிமையாளர், அம்பாள் களஞ்சியம் - திருநெல்வேலி), சிறீகாந்தலிங்கம் துரைராசா, சிவராசா (உரிமையாளர், கணேசண்ணை களஞ்சியம், திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு மாமியாரும் தவராணி, காலஞ்சென்ற பழனியாண்டி, பாக்கியம், செல்லம்மா, கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் கிருஷ்ணதாஸ், நவீனன், விஜிதா, துசிதா, பாமினி, தசாந்தன், சர்மிளா, வேணுகா, சுபாசினி, மேனகா, தேனுகன், சதுர்ஷன், தர்மீகன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும் திருக்குமார், தினேஸ்குமார், செல்வராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2003) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.தியாகராசா (கணவர்),
சிறீமோகனராசா
(மகன் - தேனு களஞ்சியம், திருநெல்வேலி).

*ஓட்டுமடம் வீதி,*
*சிவலிங்கப் புளியடி,*
*யாழ்ப்பாணம்.*
(21146) (16-17-31)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

3 மாதங்கள் நிரம்பிய 1சோடி பொமேரியன் வெள்ளை நாய்க்குட்டிகள விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: திருமதி சோமாஸ கந்தர் விசாலாட்சி, ஞானசம்பந்தர் கலை மன்றத்தடி, புலோலி கிழக்கு, பருத்தித்துறை. (சி-29317)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1Kg - 160/-. மொத்த மாகவும், சில்லறையாகவும் விற்ப னைக்குண்டு. தொடர்பு: 1) மான்ஸ் பாடசாலை வீதி, டச்றோட், உடுவில். 2)பொன்னாலை வீதி, விதானை வளவு, மானிப்பாய். 3) மீன் சந்தை முன்பாக சுன்னாகம். (21120)

## வீடு விற்பனைக்கு

வேலணை கிழக்கு, வேலணை - 04, வேலணையில் 5 பரப்புக் காணி யில் அமைந்த சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: பொ.வள்ளிகாந்தி, 30/4, அரசடிப் பிள்ளையார் வீதி, நாயன்மார்கட்டு, நல்லூர். (21134)

## வீடு வாடகைக்கு

சந்தனமாதா கோவில் ஒழுங்கை, கொழும்புத்துறைப் பகுதியில் 4 பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதி களுடனான வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: R.சவுந்தரநாயகம், இல. 12/21, சந்தனமாதா கோயில் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P. 021 - 222 6056 நேரில் வரவும். (21062)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த, புனர்பூசம் 2ஆம் பாதம், சுயதொழில் புரியும், 57ஆம் ஆண்டு பிறந்த, செவ்வாய்க்குற்றமற்ற மணமகனுக்கு மணமகள் தேவை. தொழில் புரிபவர்களும் விரும்பத்தக் கது. விளம்பர இல. 1978, மே/பா உதயன். (21133)

## தவறிவிட்டது

மாவிட்டபுரம், தெல்லிப்பழையைச சேர்ந்த சிற்றம்பலம் கனகசபை, அன்ன லட்சுமி கனகசபை ஆகியோர்களின் தேசிய அடையாள அட்டை (இல. 212970085V,267341010V), விசேட அடையாள அட்டை (இல.0807017576, 0907017577) என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கோண்டாவில் மேற்கிலுள்ள சாந்தி புடைவையகத் தில் ஒப்படைத்துதவவும். (21119)

சுதுமலைக்கும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கும் இடையில் 1/2 பவுண் சங்கிலி (கிருஷ ணன் பென்ரனுடன் கூடியது) 05.08.2003இல் தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள் M.சுசீலா, சம்பந் தன் டிஸ்பென்சறி, 574/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ளவும். (21131)

## பூக்கன்றுகள் விற்பனைக்கு

பாம்ஸ் ஜந்தூரியம் (சிவப்பு), மஞ்சள கொடிப்பூ, முசந்தாஸ் (சிவப்பு, பிங்), எவகிறீன், அடுக்கு நந்தியாவெட்டை, செவ்வரத்தை (மஞ்சள் அடுக்கு), ஸ்பொஞ்பிளவர், ரோஜா, ஈரபபலா ஆகியவை விற்பனைக்குண்டு. தொடர்பு: 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (I.C.R.C இற்கு அண்மையில்) (21058)

# பாதிக்கப்பட்ட தென்னந் தோட்டங்களுக்கு நிவாரணம் தர நடவடிக்கை எடுங்கள்

## அரசிடம் சங்கம் கோரிக்கை

வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் பாதிக்கப்பட்ட தென்னந தோட்ட உரிமையாளர்களுக்கு நிவா ரணம் வழங்குமாறு அரசாங்கத்தை வட மாகாண தெங்கு செய்கையாளா சங்கம் கேட்டுள்ளது.

ஈராக் போர் காரணமாகப் பாதிக் கப்பட்டுள்ள தாழ்நில தேயிலை உற் பத்தியாளர்களுக்கு நிவாரணம் வழங்கு வதற்கான விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவது போல் தமக கும் நிவாரணம் வழங்குமாறு சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தேயிலை, இறப்பர், தெங்கு ஆகிய பொருள்கள் இலங்கையில் முக்கிய பணப் பயிர்களாகக் கருதப்படுகின்றன. மற்றையவற்றுடன் ஒப்பிடும்போது தென்னைப் பயிர்ச்செய்கைக்கு ஏற் பட்ட அழிவுகள் மதிப்பிட முடியாதவை.

அந்தப் பயிர் அழிவுகளுக்கு நிவார ணம் வழங்கப்படுவதுபோல் தெங்குப பயிர்ச் செய்கைக்கும் நிவாரணம வழங் கும்படி அரசாங்கத்தை வடமாகாண தெங்கு செய்கையாளர் சங்கம் கேட் கிறது என்று சங்கம்தெரிவித்துள்ளது.

## குளம் புனரமைப்பு

தென்மராட்சி,ஒக.7

உலக வங்கியின் உலக உணவு நிறுவனத்(WFO)தினரால் வரணி இயற்றாலை ரத்தில் குளம் மற்றும வாய்க்கால் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வேலைத் திட்டத்தில் இப் பகுதியைச் சேர்ந்த 219 பேர் வேலை செய்து வருவதாகவும், இவர்களுக் கான உலர் உணவு பொருள்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரி விக்கப்பட்டது. (ம-117)


## தேவை

வடமராட்சியில் பிரபல கணனி கல்வி நிறுவனத்தை நிர்வகிப்பதற்கு சிறந்த ஆளுமையுள்ள ஒருவர் உடனடியாகத் தேவைப்படுகிறார். கணனி அடிப்படை அறிவுடையவர் பெண்/ஆண விரும்பத்தக்கது.

*தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி எண்–0777–704583*

(21123) (21-26-15-19))


## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியாகக் கடமையாற்றுபவர்களாகிய திருமதி P. கோபாலசிங்கம அவர்களின் அன்புத் தாயாரும் திரு.G.கோபாலசிங்கம் அவர்களின் அன்பு மாமியாருமாகிய

**திருமதி ஐயாத்துரை இராஜலட்சுமி**

அவர்கள் 06.08.2003 இல் காலமானதையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அமரருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

- யாழ். போதனா வைத்தியசாலை
தாதிய உத்தியோகத்தர்
நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.

(21141) (21-26-15-19)

## அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச்சபை

## பொதுக்கூட்ட அறிவித்தல்

வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்டம் 21.08.2003 வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெறும்.

உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

க.சிவசுப்பிரமணியம்,
செயலாளர்,
07.08.2003

Dr.சி.விமலேந்திரன்,
தலைவர்,
வைத்திய பொறுப்பதிகாரி

(சி-29336) (21-26-15-19)


## வீடு, தோட்டம் விற்பனைக்குண்டு

1. யாழ். வீதியில் 3பரப்புக் காணியுடன் நல்ல நிலையிலுள்ள வீடு விற்பனைக்குண்டு.
2. கச்சேரி நல்லூர் வீதியில் இரண்டு அடுக்குகளையும், நிலவறையும் கொண்ட 4000 சதுர அடி விஸ்தீரணமுள்ள மாடி வீடு 6 பரப்புக் காணியுடன் விற்பனைக்கு உண்டு. இந்த வீடு மூன்றாவது மாடி கட்டத்தக்க தள அமைப்புக் கொண்டது. இதைவிட தனியானதொரு கட்டடமும் உள்ளது.
3. பளையில் 30 ஏக்கர் தென்னந்தோட்டமும் ஓரளவு சேதமடைந்த வீடும் நல்ல கிணறும் கொண்ட தோட்டம் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- **சிவராஜா** அல்லது **மகா**
151, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர்.
T.P. 077-7116695.

(21132) (21-26-15-19)


## அழைப்புக் கட்டளை

இல.16பிரிவு 55 (1)

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள / மாவட்ட நீதிமன்றத்தில்

கனகராசா காண்டீபன் பெண் கஸ்தூரி
312A, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். வழக்காளி/கள்

வழக்கு இல. மணநீக்கம் / 354 எதிர்

கனகராசா காண்டீபன்
8/6, நாவலர் வீதி,
பெருமாள்கோயிலடி, யாழ்ப்பாணம்.
எதிராளி/

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளி/க்கு

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி நமக்கும் உமக்கும் இடையே உள்ள விவாகத்தை இரத்துச் செய்வதற்காக இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு இணைக்கப்பட்டுள்ள பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2003 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 25 ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவீர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதி யன்று அல்லது அதன் முன்னர் நீவீர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக் காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப் படுமென அறிந்துகொள்ளுமாறு நீவீர் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணிமூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப பொன்றைக் கோப்பிடுமாறு நீவீர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறீமோகன்
*பதிவாளர்,*
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

பவானி சற்குணராசா

*குறிப்பு:* விளக்கத்தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்கப்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவீர் பெறவிரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவர் யொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக கொடுக்குமாறும் 80ஆம் பிரிவின் மூலம் நீவீர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

து.சிறீமோகன்
*கையொப்பம் பதிவாளர்,*
*2003ஆம் ஆண்டு ஆடி மாதம் 25ஆம் நாளாகிய இன்று*

(21136) (21-15-19)

## மரண அறிவித்தல்

### நாகர் காசிப்பிள்ளை

மூளாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகர் காசிப்பிள்ளை அவர்கள் 04.08.2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் புஷ்மலர் அவர்களின் அன்புக் கணவரும் பரமேஸ்வரன் (சுவிஸ்), தர்மகுலசிங்கம் (சுவிஸ்), சிவசுஸ்வரி (சுவிஸ்), டுபாஸ்கரன் (ரகு, பிரான்ஸ்), சுரேஸ்குமார் (றூபன்) ஆகியோரின் அன்புத் தந்தை யாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2003) வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மூளாய் பித்தனை இந்துமயானத்துக்கு எடுத் துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி கா.புஷ்பமலர்
(மனைவி)

*மூளாய் தெற்கு, சுழிபுரம்.*

(21130) (21-26-15-19)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 497 |
| திகதி | 05.08.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல. 4098866-4114190

வெற்றி இலக்கங்கள் **03 12 28 36**

லக்கினம் கன்னி



ஜக்பொட் பரிசு ரூபா. 1,734,500/- வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **2,496,150/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 340,952 | 10 | 3,409,520 |
| 2 இலக்கங்கள் | 31,334 | 20 | 626,680 |
| 1 இல + லக்கினம் | 30,898 | 30 | 926,940 |
| 2 இல + லக்கினம் | 2,869 | 100 | 286,900 |
| 3 இலக்கங்கள் | 825 | 500 | 412,500 |
| 3 இல + லக்கினம் | 82 | 5,000 | 410,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,734,500 | - |
| மொத்தம் | 406,964 | - | 6,472,540 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா.6,472,540/-

தொடர் இல. 5098186க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 ஆகஸ்ட் 08ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4106440-9-00
4106125-6-70
4111365-0-60
4111964-3-20
4111626-6-15

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

# செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் யாழ். நகரில் நாட்டுக்கூத்து விழா

## திருமறைக் கலாமன்ற ஏற்பாட்டில் நடக்கும்

யாழ்ப்பாணம்,ஓக.7

திருமறைக் கலாமன்றம் நடத்தும் வருடாந்த தமிழ்விழா இந்த ஆண்டு மாபெரும் நாட்டுக்கூத்து விழாவாக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

இந்த நாட்டுக்கூத்து விழா, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதிமுதல் 14ஆம் திகதிவரை ஐந்து நாள்கள் யாழ். நகரில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, மன்னார் மற்றும் மலையக பிரதேச கூத்து மரபுகள் அப்பிரதேச கலைஞர்கள்மூலம் அரங்கேற்றப்படும். அத்துடன், அவை தொடர்பான ஆய்வரங்குகள் மற்றும் பரீட்சார்த்த முயற்சிகள் என்பனவும் அடங்கிய - தேசிய அரங்கை நோக்கிய - தேடலை ஏற்படுத்துவதே இவ்விழாவின் நோக்கமாகும் என திருமறைக் கலாமன்ற ஊடக இணைப்பாளர் தெரிவித்தார்.

நாட்டுக்கூத்து விழாவின் ஐந்து நாள்களிலும் காலையில் கருத்தரங்கு அமர்வுகளும் மாலையில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்நாட்டுக்கூத்து விழாவினை முன்னிட்டு தென்மோடி நாட்டுக்கூத்துப் போட்டி ஒன்றையும் திருமறைக் கலாமன்றம் நடத்தவுள்ளது.

(ம-9)

# இந்தியத் திரைப்படச் சங்கத்தில் செயலாளராக இந்திராகாந்தி இருந்து அத்துறையை வளர்த்தார்

## சலனசித்திரம் பயிற்சி ஆசிரியர் தெரிவிப்பு

உலக நாடுகள் பலவற்றில் நடைமுறையிலிருக்கும் திரைப்படத்துறைச சட்டம் இலங்கையில் அமுலில் இல்லை. இதனால் இங்கு திரைப்படத்துறையின் வளர்ச்சி தேக்கநிலையில் உள்ளது.

இந்தியத் திரைப்படச் சங்கத்தின் தலைவராக பிரபல இயக்குநர் சத்யத்ரேயும், செயலாளராக இந்திராகாந்தியும் பணிபுரிந்து திரைப்படத்துறையின் வளர்ச்சியை அங்கு பேணினர்.

றோயல் கல்லூரி மண்டபத்தில் திங்களன்று நடைபெற்ற திரைப்படத் தொழில்நுட்ப வகுப்பு மற்றும் பயிற்சிப்பட்டறை ஆரம்ப விழாவில் உரையாற்றிய சலன சித்திரம் பயிற்சி ஆசிரியர் க.தேவதாசன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சலனசித்திரம் என்ற அமைப்பை நாம் ஏழு வருடங்களுக்கு முன் உருவாக்கினோம். குறுந்திரைப்படத்துறையின் வளர்ச்சிக்காக அது உழைத்து வருகிறது. 43 வருடங்களாக தமிழ் நாடகத்துறைக்கு றோயல் கல்லூரி மாணவர்கள் நல்ல பங்களிப்பினைச் செய்துள்ளனர்.

அவர்கள் குறுந்திரைப்படங்களை உருவாக்கக் கூடியவர்களாக தேர்ச்சி பெறச் செய்யவேண்டும். அதற்காக திரைப்படத் தொழில்நுட்ப பயிற்சிப்பட்டறையை நடத்தி உதவுவதற்கு சலன சித்திரம் முன்வந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

றோயல் கல்லூரியின் தமிழ் ஊடகத்துறை ஆலோசகரான கமலினி செல்வராஜன் கூறியதாவது:

திரைப்படத்துறையில் பயிற்சி பெற விரும்பும் இக்கல்லூரியின் மாணவர்கள் நல்ல ரசனை உணர்வினை வளர்த்துக் கொள்ளவேண்டும். திரைப்படங்கள் மாணவர்களின் ரசனை உணர்வை முற்றாக வளர்த்து விடுகிறது என்று கூறமுடியாது. ஒவ்வொரு தொடர்புசாதனத்திலும் நன்மை, தீமைகள் உண்டு. குறுந்திரைப்படமொன்றை தயாரிக்க விரும்பும் மாணவர்கள் முதலில் பத்து நிமிடத்துக்குரிய குறுந்திரைப்படமொன்றை தயாரிக்கவேண்டும். அதன் வாயிலாக நல்லதொரு விடயத்தை பார்வையாளர்களுக்கு சொல்லிவிடலாம். றோயல் கல்லூரி மாணவர்கள் நல்ல குறுந்திரைப்படங்களை உருவாக்குவதற்கு தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனமும் உதவ முன்வந்துள்ளது. இது மகிழ்ச்சி தருகிறது. - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ம)

## வாராந்த வீடியோக்காட்சி

யாழ்ப்பாணம்,ஓக.7

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெற்று வரும் திரைப்படக் காட்சித் தொடரில் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு 'உத்தர்' என்னும் வங்க மொழித் திரைப்படம் வீடியோக் காட்சியாகக் காண்பிக்கப்படவுள்ளது.

பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ள இப்படத்தினை ஆர்வலர்கள் பார்வையிடலாம் என அறிவிக்கப்படவுள்ளது.

(ம-10)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஓக.7

'தமிழீழத்தின் கடல் வளங்களும் மீனவர்கள் எதிர்நோக்கும் சவால்களும்' என்னும் கருப்பொருளில் அமைந்த சமகால கருத்தரங்கு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அ. சூசை ஆனந்தன் கருத்துரையை வழங்கவுள்ளார். (ம-10)

# திருகோணமலை மாவட்டத்திநுள்ளே 9,000 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்

## நிக்கொட் பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

திருகோணமலை,ஓக.7

திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெயர்ந்து வாழும் 9 ஆயிரம் பேர் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்காகக் காத்திருக்கிறார்கள்.



- இவ்வாறு 'நிக்கொட்' திட்ட பிரதித திட்டப் பணிப்பாளர் என்.புகேந்திரன் தெரிவித்தார். திருமலை மாவட்டத்தில் உள்ள கந்தளாயில் 'நிக்கொட்டினால்' அமைக்கப்பட்ட பாடசாலை புதிய கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் மகாவலிபுர வித்தியாலயத்துக்கு புதிய கட்டடம் அமைக்கப்பட்டது.

அங்கு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருமலை மாவட்டத்தில் 50 லட்சம் ரூபா செலவில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் 3 திட்டங்களை 'நிக்கொட்' அமைப்பு செயற்படுத்தி வருகின்றது.

மாவட்டத்தில் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் கந்தளாயிலும், சிங்கள மக்கள் வில்கமவிலும், முஸ்லிம் மக்கள் புடைவைக்காடு பகுதியிலும் மீளக் குடியமர்ந்துள்ளனர் - என்றார்.

நிகழ்வில் கலந்துகொண்ட 'நிக்கொட்' திட்ட திருமலை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் ஆர்.உமாகாந்தன் கூறுகையில், திருகோணமலை மாவட்டத்தில் செயற்படுத்துவதற்கென 76 திட்டங்கள் இனங்காணப்பட்டன என்றும் கூறினார்.

அவற்றில் 35 திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் 35 திட்டங்கள் ஏற்கனவே செய்து முடிக்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

## முக்கிய சந்திகளில் மின்குமிழ்கள் இல்லாமல் சிரமம்

தெல்லிப்பழை,ஓக.7

குப்பிளான் பகுதியில் உள்ள பிரதான சந்திகள் மற்றும் வீதிகளில் மின்விளக்குகள் பொருத்தப்படாமையால் இப்பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன.

கடந்த மார்ச் மாதம் தொடக்கம் குப்பிளான் பகுதிக்கு மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகின்ற போதும் சந்திகளிலும் பிரதான வீதிகளிலும் மின்விளக்குகள் இன்னமும் பொருத்தப்படாமையால் இரவு வேளைகளில் பயணம் செய்யும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

(ம-10-150)

# தமிழர்களின் அரசியல் வாழ்வுக்கே சாரதிகளாக இருப்போர் புலிகள்தான்!

## கனடாவில் இருந்து ஜனாதிபதிக்கு பகிரங்க மடல்

சந்திரிகா 'மேடம்' அறிவது!

அம்மா உங்களின் கவலை புரிகிறது!

ஜே.வி.பியைத் தவிர இப்ப யாரும் உங்களைக் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை.

முன்னரெல்லாம் வெளிநாட்டுத் தூதுவர்களையும் ராஜதந்திரிகளையும் சந்திக்கப் பயந்தீர்கள். இப்போது அவர்கள் உங்களைச் சந்திக்கப் பயப்படுவது உங்களுக்குத் தெரிகிறது. அதுதான் உங்கள் கவலை என்று எனக்குப் புரிகிறது.

யானை ஒன்று குளித்துவிட்டு வந்ததாம். அந்த வழியால் எதிரே ஒரு பன்றி ஒன்று சேற்றில் விழுந்து புரண்டு விட்டு வந்ததாம். இரண்டும் எதிர் எதிரே சந்தித்தன. அது ஒரு குறுக்கலான வீதி. உடனே யானை ஒதுங்கிக்கொண்டது. பன்றி வீறாப்பாகச் சென்றது. எனக்கு இந்த யானை எவ்வளவு பயம்? என்னைக் கண்டதும் அது ஒடுங்கி ஒதுங்கிக் கொள்கிறதே என்று - அந்தப் பன்றி தனக்குள் நினைத்துக்கொண்டது.

ஆனால் பன்றிக்கு பின்னர்தான் புரிந்தது - இது தனக்குக் கொடுக்கும் மரியாதை அல்ல தன்னை கேவலப்படுத்தும் செயல் என்று. இதுதான இப்போது உங்களுக்கு நடக்கின்றது. யானைச் சின்னம் கொண்ட ஐ.தே. கட்சி தலைவர் கூட உங்களைப் பார்த்தால் புகழ்கிறார். அட அவரை விடுங்கள் - அமெரிக்க ராஜாங்கச் செயலராக இருக்கட்டும், ஜப்பான் தூதுவராக இருக்கட்டும், நோர்வே அமைச்சராக இருக்கட்டும் யாரைப் பார்த்தாலும் உங்களைத்தானே புளுகுகின்றனர். முதல் முதலில் சேற்றில் விழுந்தது இந்தப் பன்றிதான் - மன்னிக்கவும் முதல் முதலில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தது நீங்கள்தான். அதைத்தான் ரணில் தொடர்கிறார் என்று எப்ப பார்த்தாலும் உங்கள் புராணம்தான்.

இது எதற்கு? உங்கள் மீது உள்ள மரியாதையாலா? இல்லை.... பயத்தில்.. உங்கள் வாய்க்குப் பயத்தில்...

வாழைப்பழத்தைக் கொண்டுவந்தவளை வாசலில் இருத்திவிட்டு, வாயைக் கொண்டுவந்தவளை நடுவீட்டில் இருத்துவதுபோல் உங்களை இருத்தி வைத்துள்ளார்கள் என்பதை இப்போதாவது நீங்கள் புரிந்திருப்பீர்கள்.

எல்லாரும் என்னைப் புகழ்கின்றனர். ஆனால் புலிகளும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் என்னை பாராமுகமாக இருப்பதேன் என்று உங்களுக்குப் பெருங்கவலை; அது வேறொன்றுமில்லை - துஷ்டனைக் கண்டால் தூர விலகு என்று சொல்வார்கள். அதற்காகத்தான்.

அதாவது நீங்கள் துஷ்டர். ரணில நல்லவரென்பதல்ல. அவர் உங்களை விட மோசமானவர் என்பதை புலிகள் அறிவர். ரணிலும் நீங்களும் மாறினாலும் பிரச்சினை தமிழ் மக்களுக்குத்தான் -

வலக்கை இடக்கை மாறினாலும் உலக்கை இடிப்பது உரலைத்தான் என்பதை புலிகள் நன்கு புரிந்துகொண்டவர்கள்.

ஆனால், உங்களோடு மட்டும் ஏன் தமிழ்ப் பிரதிநிதிகள் பேசவிரும்பவில்லை என்பதை நீங்கள் புரிந்துகொண்டிருக்கவேண்டும். உங்களுக்கு இது புரியவேண்டும் என்பதற்காகத்தான் கலாநிதி பாலசிங்கம் ஏற்கனவே இது குறித்து ஒரு தடவை விளங்கப்படுத்தினார்.

ரணில் நல்லவர் என்பதற்காக அவரோடு தாங்கள் பேசவில்லை. அவர் - தான் ஆட்சிக்கு வருவதற்கு முன்னரே தேர்தல் பிரசாரத்தின் ஆரம்பத்திலிருந்து இதுவரை புலிகளைப் பற்றி கூடாமல் அவதூறாகவோ தவறாகவோ எதுவும் பேசவில்லை. இதனால்தான் எங்களால் ரணிலோடு தொடர்ந்து பேச முடிகின்றது - என்றார் கலாநிதி பாலசிங்கம்.

இது சொல்லி கன மாதங்களுக்கு பிறகும் உங்களுக்குப் புரியாததால் தான் மீண்டும் கடந்த மாதம் பாலசிங்கம் ஒன்றைச் சொல்லியிருக்கிறார். நாங்கள் சந்திரிகாவுடன் பேசுவதானால் முதலில் அவரும் கதிர்காமரும் எங்கெங்கு சென்று எங்களைப் பயங்கரவாதிகள் என்று சொல்லி பிரசாரம் செய்தார்களோ அங்கெல்லாம் சென்று எங்களை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லவேண்டும் - என்று பாலசிங்கம் சொல்லியிருக்கிறார்.

ஆத்திரக்காரிக்கு புத்தி மட்டு என பார்கள். நீங்கள் இதைப் புரிந்துகொள்வதை விடுத்து கோபப்பட்டிருக்கின்றீர்கள்.

இந்தக் கோபத்தால்தான் இம்முறை நீங்கள் சில நல்ல வாக்குகளைச் சொல்லியிருக்கிறீர்கள்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் சாரதிகளாக விடுதலைப் புலிகள் இருக்கின்றனர் என்று சொல்லியிருக்கின்றீர்கள். இதை என்ன நோக்கத்தில் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள் என்று புரிகிறது. விடுதலைப் புலிகள் என்ன காரணத்திற்காக உங்களுடன் பேச பின் நிற்கிறார்களோ அதே காரணத்திற்காகவே கூட்டமைப்பினரும் பின்னிற்பதை நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள்.

உடன் நீங்கள் என்ன செய்திருக்கவேண்டும். புலிகளைப்பற்றி அவதூறாகக் கதைப்பதை நிறுத்த வேணடும். அதுவரை கூட்டமைப்பினர் மட்டுமல்ல - ஆனந்தசங்கரி கூட உங்களுடன் பேசப் பயப்படுவார்.

நார் அறுந்தால் முடியலாம். நாடி அறுந்தாலும் முடியலாம். மனம் அறுந்தால் முடியேலாதம்மா?

தமிழ் மக்களால் வெறுக்கப்படும் கும்பல்களுக்காக நீங்கள் அனுதாபப்படுகிறீர்கள். அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்றீர்கள். ஆனால், தமிழ்மக்களின் பாதுகாப்புப் பற்றி கொஞ்சமும் அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை. அப்பாவிச் சிங்கள மக்களின் பாதுகாப்பைப் பற்றியே அக்கறைப்படாதவர் நீங்கள் தன்பிள்ளைக்கு பதைக்காதவளா சக்களத்தி பிள்ளைக்கு பதைக்கப்போகிறாள்?

இந்த நிலையில் - காட்டுக் கிளாக்காயும் கண்கெட்ட ஓணானும் கோர்த்துக் குலாவுவதுபோல் உங்களுடன் பேசுகின்றவர்கள் அனைவரும் - உங்களுடன் பேச்சுக்களை வைக்கின்றவர்கள் அனைவரும் தமிழ் மக்களின் துரோகிகள் என்ற ஒரு நிலை உருவாகியுள்ளது.

இந்த நிலையில் எவர் உங்களுடன் வந்து பேசுவார். அப்படிப் பேசினாலும் உங்கள் வாயிலிருந்து உதிரும் உண்மைகளால் அவர்களுக்கு பின்னால் பிரச்சினைகளே வருகின்றன. வலிய உறவாடி வாசலிலே வந்தாலும் பொய் உறவாடி போய்வா என்றீர்கள்....

உங்களுடன் பேசிப்பார்த்தால் என்ன என்று அமைச்சர் மகேஸ்வரன் நினைத்தார். வந்து பேசினார். புலிகளுடன் பேச விரும்புவதாக அவரிடம் சொன்னீர்கள். மறுநாளே நான் அப்படிச் சொல்லவில்லை என்று மறுத்தீர்கள். இப்ப எவருக்கும் உங்களுடன் பேசப் பயமாக இருக்கின்றது.

இப்ப இந்த வெப்பியாரத்தில் கூட்டமைப்பினரின் சாரதிகள் புலிகள் என்கிறீர்கள். அவர்கள் உங்களைக் கொல்லப் போவதாக எச்சரிக்கிறீர்கள்.

பிரேமதாசா ஆட்சிக்காலத்தில் டக்ளஸ் தேவானந்தா உங்களை கொலை செய்யப் போகின்றார் என்று தெரிவித்திருந்தீர்கள்.

அப்போது உங்களை கொலை செய்வதற்கு பிரேமதாச - எஸ்பி கருணாரட்ணவை அனுப்பியதாகச் சொன்னீர்கள். இப்போது உங்களின் பாதுகாப்பாளராக அதே கருணாரட்ணவையும், உங்கள் நம்பிக்கைக்குரியவராக அதே டக்ளஸ் தேவானந்தாவையும் வைத்துள்ளீர்கள்.

எனக்கென்னவோ நீங்கள் சொன்னதன் அர்த்தம் வேறாகத் தெரிகிறது. எத்தனை நாள்தான் நீங்கள் திருந்தாமல் இருப்பீர்கள்? இப்போது நீங்கள் திருந்திவிட்டீர்களோ என்ற சந்தேகம் எனக்கு!. உங்கள் மீது உள்ள சந்தேகத்தில் உங்கள் வாயிலிருந்து வரும் வார்த்தைகளுக்கு எல்லோரும் தவறாகவே அர்த்தப்படுத்திக் கொள்கின்றனரோ என்னவோ? எனக்கென்னவோ நீங்கள் திருந்தி புலிகளைப் புகழ்ந்ததாகத்தான் படுகின்றது.

அந்த பார்த்தசாரதியே பாரதப் போரில் அர்ச்சுனனுக்குச் சாரதியாக இருந்து ஒரு பாரதப் போரை வழி நடத்தினார்.

உங்களின் படையினர் வைத்திருந்த பல கனரக வாகனங்களுக்கு இப்போது சாரதிகளாக இருப்பது புலிகள்தான். ஒருவகையில் கூட்டமைப்பினருக்கு சாரதிகளாகப் புலிகள் இருப்பது உண்மையாக இருக்கலாம். அவர்களின் அரசியல் என்னும் வாகனத்தை ஓட்டுவது புலிகளாக இருக்கலாம்.

அவர்களுக்கு மட்டுமல்ல, - தமிழரின் அரசியல் வாழ்க்கைக்கு சாரதியாக இருப்பதே அவர்கள்தான். தமிழர்களுக்கு அவர்கள் வெறும் 'ட்றைவர்'கள் மட்டுமல்ல இறைவர்கள் என்பதையும் நினைவூட்டியுள்ளீர்கள்.

ஆறாம் எமது வாழ்க்கையின் 'ஸ்ரேரிங்'கையே நாம் அவர்களிடம்தான் ஒப்படைத்துள்ளோம். இதை நீங்கள் சொல்ல வேண்டியது கூட்டமைப்பிடமல்ல. மற்றைய அமைப்புகளிடம்தான சொல்லவேண்டும். அவர்களும் புலிகளிடம் தமது 'ஸ்ரேரிங்'கை ஒப்படைத்துவிட்டு பின்னால் அமர்ந்து கொள்ள வேண்டும். நிச்சயமாக புலிகள் எல்லோரையும் கரைசேர்ப்பார்கள்.

இப்படிக்கு

வாசகன் ரட்ணதுரை (கனடா)

# யாழ்.-கொழும்பு ரயில் சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குக!

## ஈ.பி.டி.பியின் மதனராஜா எம்.பி. வேண்டுகோள்

யாழ். குடாநாட்டுக்கான ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். யாழ். - கொழும்பு ரயில் சேவை தான் முன்னர் ரயில்வே திணைக் களத்துக்கு அதிக வருமானத்தைப் பெற் றுக் கொடுத்தது. இன்று யாழ்ப் பா்ணம் செல்வதென்றால் கப்பமும், வரியும் செலுத்த வேண்டியுள்ளது.

ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட எம்.பியான நடராஜா மதனராஜா நேற்று நாடாளுமன்றத்தில் ஒத்தி வைப்புவேளை விவாதத்தில் பேசும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

முன்னர் யாழ். குடாநாட்டுக்கும் கொழும்புக்கும் ஐந்து ரயில் சேவை கள் நடைபெற்றன. மக்கள் குறைந்த செலவில் - வசதியாக - பயணம் செய்த னர். 1990 ஆம் ஆண்டு முதல் யாழ் குடா நாட்டுக்கான ரயில் சேவைகள் முற்றாக ஸ்தம்பித்தன . இன்று அர சாங்கத்தால் ஒரு போக்குவரத்து பஸ் சேவையைக்கூட யாழ்ப் பாணத்துக்கு நடத்தமுடியவில்லை. யாழ். செல்லும் பயணிகள் இன்று கப்பமும், வரியும் செலுத்த வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர்.

ரயில்பாதைகள் பங்கர்களாக மாற்றப்பட்டுள்ளன. மட்டக்களப்பு நகருக்கு இன்று ரயில் போக்கு வரத்தை நடத்த முடியாதுள்ளது. இரண்டு தடவைகள் ரயில் பாதை கள் சேதப்படுத்தப்பட்டன. ரயில் பாதையைத் திருத்தச்சென்றவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

- இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

### தும்பளை திறீஸ்டார் விளையாட்டுக் கழகம் நடத்திய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

பரிசுபெற்ற இலக்கங்கள்:

முதலாம் பரிசு - 7805

இரண்டாம் பரிசு - 8326

மூன்றாம் பரிசு - 9648

10 ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்:

4209 4724 8964 6320 3111

6711 3907 5641 3854 1044

(சி-29344) (31-14-17) - நிர்வாகம்.

### கண்ணீர் அஞ்சலி

06.08.2003 அன்று காலமான

திருமதி தர்மலிங்கம் கமலாம்பிகை

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிற்காகப் பிரார்த்திக்கும் ....

நெடுந்தீவு. (C29350) (32-14-17) தென்னிந்தியத் திருச்சபையினர்.

### கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக ஊழியர்

த.கெங்காதரன்

அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி தருமலிங்கம் கமலாம்பிகை

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
நெடுந்தீவு. (C29347) (32-14-17) - ஊழியர் நலன்புரிச் சங்கம்.

### 31 ஆம் நாள் துயர்பகிர்வு



எமது குடும்ப உறவுகளான
திருச்செல்வம், தவராசா
ஆகியோரின் அன்புத் தாயாரான
அமரர் திருமதி செல்வதி நாகரத்தினம்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

தர்மரூபன் பல்பொருள் வாணிபம்,
மானிப்பாய். (21151) (32-14-17)

அமரர் மா.தர்மலிங்கம் குடும்பத்தினர்.

### கண்ணீர் அஞ்சலி

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் இரண்டாம் வருட ஆரம்பக் கல்வி A பிரிவு ஆசிரிய மாணவி செல்வி மு. ஜெயமதி அவர்களின் அன்புத் தந்தையார்

கந்தையா முத்துலிங்கம்

அவர்கள் வவுனியாவில் 06.08.2003ஆம் திகதி இயற்கையெய்தியதை யிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர் களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின் றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

கோப்பாய்
ஆசிரிய கலாசாலை சமூகம்.

(21154) (31-14-17)

### கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி
க.வாசுகியின்
அன்புத் தந்தையார்
அமரர் ஜீவரட்ணம் கனகசிங்கம்
அவர்களின் திடீர் மறைவையொட்டி துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

A/L 2005 விஞ்ஞான பிரிவு மாணவிகள்,
யாழ். இந்து மகளிர் கல்லூரி.
(21148) (32-14-17)

### கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம்,ஓக.7

ஜேர்மன் தொழில்நுட்ப நிறு வனத்தால் நல்லூர் பிரதேசத்தில் செயற்படுத்தப்பட்ட வீட்டுத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத் தின் உதவியுடன் நல்லூர் பிரதே சத்தில் அமைக்கப்பட்டுவரும் 50 வீடு களுக்கான பயனாளிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள் வர். (எ-6)

★★★

யாழ்ப்பாணம்,ஓக.7

முல்லைத்தீவு மாவட்டத்தி லுள்ள முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயங்களின் அனைத்து பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக் கான அவசர கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள் ளது.

அனைத்துப் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் தமது கல்விச் சான் றிதழ்கள் மற்றும் ஆவணங்களுடன் இதில் தவறாது கலந்துகொள்ள வேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட கல்வி வலயங்களின் பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவு னியா மாவட்ட இணைந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் சங்கத் துடன் இன்று முதல் முல்லைத்தீவு மாவட்ட முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயங்களின் பகுதி நேர ஆங் கில ஆசிரியர் சங்கமும் இணைந்து தீவிரமாகச் செயற்படும் எனவும் - அவர் அறிவித்துள்ளார்.

(எ)

லஷ்சுமி சினிமா
இணுவில்
அர்ஜுன். மனிஷாகொய்ராலா. வடிவேல். மணிவண்ணன் இன்னும் பலர் நடிப்பில்
முதல்வன்
பு.நேரம்: 11.00,3.00,7.00.
(21145) (31-14-17)

நாகம்ஸ் சுன்னாகம்
8ஆம் திகதி வரை மட்டும்
அர்ஜுன், கிரண், கவுண்டமணி நடித்த
பரசுராம் (றீலஸ்)
தினசரி காட்சி : 11.00, 3.00, (பு.நே.)
The World Is Not Enough
இரவு 7.00 (பு.நே.) (007)
(C29232) (31-14-17)

நிரஞ்சனாஸ் சங்கானை
சாருகான், அஜித் நடித்த
சாம்ராட் அசோகா
(ஹிந்திப் படத்தின் தமிழாக்கம்)
தினசரி காட்சி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
Red Scorpion
தினசரி 8.45 இறகு.
(C29213) (31-14-17)

ராஜா யாழ்ப்பாணம்
16.08.2003 வரை
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
பிரியமான தோழி!! (றீலஸ்)
மாதவன்,
ஜோதிகா நடித்த
தினசரி: 10.30,2.30,6.30,
(C/29233) (31-14-17)

லிபேட்டி அச்சுவேலி
அஜித்குமார். வசுந்தராதாஸ். மீனா. நக்மா
மற்றும் பலர் நடித்த



சிட்டிசன் (றீலஸ்)
தினசரி: 11.00. 3.00. 7.00 (பு.நேரம்)
(C/29231) (31-14-17)

# திணைக்களத் தபால்களை விநியோகிக்க தனியார் வாகனங்களும் பஸ்களும்!

## மக்கள் தொடர்பாடல் அமைச்சு பரீட்சார்த்தத் திட்டம்

கொழும்பு,ஓக.7

தபால் திணைக்களத்தின் தபால் விநியோகச் சேவைகளுக்காக தனி யார் வாகனங்களையும் தனியார், அரச பஸ்களையும் பயன்படுத்தும் பரீட் சார்த்தத் திட்டம் மேற்கொள்ளப்பட விருக்கிறது. தபால் சேவகர்களுக் குப் பதிலாக தற்காலிய ஊழியர் களின் சேவையையும் இத்திட்டத் தின்கீழ் பெறப்படும்.

தபால் சேவையை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் மக்கள் தொடர்பாடல அமைச்சு இத்திட்டத்தை மேற்கொள்ள விருக்கிறது.

சம்பந்தப்பட்ட பிரதேசத்தின் பூகோள அமைப்பின் அடிப்படையில் தகுந்த வாறு தனியார் வாகனங்களையும் பஸ் களையும் பயன்படுத்தும் அதிகாரம் இத்திட்டத்தின் கீழ் உதவித் தபால் அதிபர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கி றது.

(எ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தர்மலிங்கம் கமலாம்பிகை

நெடுந்தீவைச் சேர்ந்த திருமதி தர்மலிங்கம் கமலாம்பிகை அவர்கள் நேற்று (06.08.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற பாலாம்பிகை மற்றும் நடேசு (V.T.N.) நற்குணசிங்கம் (மல்லாவி), சூரியகுமார் (நெடுந்தீவு), கெங்காதரன் (உதவி அ.அ.பணிமனை - நெடுந் தீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2003) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நெடுந்தீவு கிழக்கு கட்டராமன் சல்லி தென்னிந்திய திருச்சபை சேமக்காலையில் நல்லடக் கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஜிவிதா வீடியோ சென்ரர்,
நெடுந்தீவு. (சி-29349) (31-17-14)

தகவல்:
த.நடேசு (மகன்).

## டேவிற் டிமாஸ் செல்வநாயகம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட டேவிற் டிமாஸ் செல்வநாயகம் அவர்கள் 05.08.2003 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் நொயலின் விமலாதேவியின் அன்புக் கணவரும் கிளமன்ற், றெயினா விக்ரோறியா, மேரி வைலற் (ஆஸ்திரேலியா), றீற்றா ஜோசப் பின் (சவூதி), விக்ரர் இம்மானுவேல், எலிசபெத் அன்ரனெற் (ஆசிரியை), சாள்ஸ் கிறிஸ்ரியன், லில்லி பற்றிமா, யூட் ஸ்ரனிஸ்லொஸ் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆறுமுகம், அருள்ராஜா, ஜெயக்குமார், சிவசங்கர், ஆனந்தன், வசந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் லக்சி, துர்க்கா, ஜீவகரன், நிரஞ்சன், மதுஷா, டினோசன், சாத்தூரியா, கரன் யூலியற் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (07.08.2003) வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு உடுவில் மல்வம் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப் பட்டு, பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி,
மானிப்பாய். (21150) (32-14-17)

தகவல்:
சாள்ஸ் கிறிஸ்ரியன்
(மகன்).

## திருமதி இராசலட்சுமி ஐயாத்துரை

அரியாலையைப் பிறப்பிடமாகவும் காட்டுக்கந்தோர் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி ஐயாத்துரை நேற்று (06.08.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா ஐயாத்துரையின் அன்பு மனைவி யும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முத்தையா - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் கமலரஞ்சினி (லண்டன்), பத்மரஞ்சினி (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), ஸ்ரீரஞ்சினி (போதனாசிரியர், ELTC, யாழ். பல்கலைக்கழகம்), சத்தியரஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும் காலஞ்சென்ற பரமலிங்கம் (முன்னாள் சிறைச்சாலை அத்தியட்சகர்) மற்றும் கோபாலசிங்கம் (தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை), ஆனந்த குமாரசாமி (கமத்தொழில் காப்புறுதிச் சபை, யாழ்ப்பாணம்), ஜெயராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான குணசிங்கம், துரைசிங்கம், ரட்ணசிங்கம் மற்றும் புவனலட்சுமி, விஜயலட் சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, நாகம்மா மற்றும் மியூறி, கமலநாயகி, Dr.நித்தியானந்ததேவி (வைத்தி யர், யாழ். மாநகரசபை), சோதிலிங்கம் (உரிமையாளர், Old Park Chinese Restaurant) ஆகியோரின் அன்பு மைத்துனியும் திருமதி மதிவதனி திலீப்குமார், காலஞ்சென்ற மணிவண்ணன் மற்றும் திருமதி மலர்விழி கீதானந்த், நிருத்திகன், பிரவீனா, அருள்பிரியா, கார்த்திகன், சவீனா, பூரண்யா, சதீஸ் அர்ச்சுனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டிலன், வேந்தன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2003) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

36/1 A, காட்டுக்கந்தோர்
ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (21149) (31-14-17)

தகவல்:
கோபாலசிங்கம் பத்மரஞ்சினி
(மகள்)

## திருமதி சின்னத்துரை மகேஸ்வரி

கொக்குவில் மேற்கு, கேணியடியைச் சேர்ந்த திருமதி சின்னத்துரை மகேஸ்வரி அவர்கள் நேற்று (06.08.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் செல்லையா சின்னத்துரையின் அன்பு மனைவியும் திருமதி பாஸ்கரன் கனகம்மா, திருமதி நடராசா லீலாவதி, சின்னத்துரை ரவீந் திரன் (சோதி), சின்னத்துரை மங்களேஸ்வரன் (பேபி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2003) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு கொக்குவில் மேற்கு, குளப்பிட்டி, ஆனைக்கோட்டை வீதியில் இருக்கும் "சொர்ணவாசா" இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சொர்ணவாசா"
கொக்குவில் மேற்கு,
குளப்பிட்டி,
ஆனைக்கோட்டை.
(21152) (31-14-17)

தகவல்:
பிள்ளைகள் -
சி.மங்களேஸ்வரன் (பேபி),
சி. ரவீந்திரன் (சோதி).

# விளையாட்டு ஒருங்கிணைப்புக்குழு கலந்துரையாடல்கள் குறித்து அறிவிப்பு

## பிரதேச ரீதியில் நடைபெறும்

யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் விளையாட்டு ஒருங்கிணைப்புக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகளை தமிழீழ விளையாட்டுத்துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

இதன்படி ஒருங்கிணைப்புக் குழுகளைத் தெரிவு செய்வதற்கான கூட்டங்கள் அந்தந்தப் பிரதேச செயலங்களில் நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மருதங்கேணி பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி காலை 10 மணிக்கும், உடுவில் பிரதேச செயலகத்தில் 19ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கும் -

சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் 20ஆம் திகதிகாலை 10 மணிகக்கும், பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் இன்று காலை 10மணிக்கும்-

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கும், கோப்பாய் பிரதேச செயலகத்தில் நாளை மறுதினம் சனிககிழமை காலை 10 மணிக்கும் -

கரவெட்டி பிரதேச செயலத்தில் இம்மாதம் 10 ஆம் திகதி மாலை 4 மணிக்கும், தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் 15ஆம் திகதி மாலை 3.30 மணிக்கும், -

சங்கானை பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி காலை 10 மணிக்கும் தெரிவுக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

விளையாட்டு ஆர்வலர்கள், விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள் ஆகியோரை இக்கூட்டங்களில் தவறாது கலந்துகொள்ளுமாறு தமிழீழ விளையாட்டுத்துறையினர் கேட்டுள்ளனர்.

(எ-8)

# மூவின மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து காலை 9.30 மணிக்கு ஆரம்பமான கண்டனப் பேரணி, மணிக்கூட்டு கோபுரச் சந்தியை அடைந்து, டொக்யாட் வீதி வழியாக உட்துறை வீதியில் உள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தை அடைந்தது.

நண்பகல் 12 மணிக்குக் கண்காணிப்புக் குழுவினருக்கும் மீனவா சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

கண்காணிப்புக் குழுவின் மாவட்டத் தலைவர் அட்டல் ப்ர்ஹான், குழுவின் பிரதித் தலைவர் ஹேட், பொலீஸ் அத்தியட்சகர் தயா சமரவீர ஆகியோர் அங்கு இருந்தனர்.

கண்காணிப்புக் குழு அலுவலகத்தினுள் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் ஏழு பேர் செல்ல அனுமதிக்கப்பட்டனர். மகஜரைப் பெற்றுக்கொண்ட மாவட்டத் தலைவர், மீனவர் பிரச்சினைக்குத் தீர்வுகாண தங்களால் முடியாது என்றும், எவ்வாறாயினும் இதனைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவருவதாகவும் கூறினார்.

அன்று கண்காணிப்புக் குழு நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தியோர் (பெரும்பான்மையினத்தவர்) இன்று முறையிட வந்திருக்கின்றனர் என்பதையும் கண்காணிப்புக் குழுவினர் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

இப்பேரணி இடைக்கால நிர்வாகதைக் கண்டித்து நடத்தப்படுவதாக எழுப்பப்பட்ட வதந்தியை மீனவர் சங்கங்கள் மறுத்துள்ளன. பேரணியின் போது நகரில் வழமையான நிலை நிலவியது. (ஐ-12)

## பண்ணையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும் அப்பகுதியில் தவங்கிடக்க நேரிடுகிறது என்று கூறப்படுகிறது.

இராணுவத்தினரும், பொலீஸாரும் கூட்டாக இந்தச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

படையினரின் இந்தத் திடீர் நடவடிக்கை தீவுப்பகுதி மக்களிடத்தில் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில் - அல்லைப்பிட்டிப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரும் தமது சோதனை நடவடிக்கைகளை கடந்த சில தினங்களாக தீவிரப்படுத்தியுள்ளனர். (எ)

## சரசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூவரும் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

சரசாலையில் படையினர் முகாமிட்டிருந்த சமயம் அவர்களது முன்னணிக் காவலரண்கள் சரசாலை கமலாசினி வித்தியாலயப் பகுதியிலும் அமைந்திருந்தன.

சரசாலையில் கண்ணி அகற்றும் பணி மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஐ-6-117-12)

## கண்ணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பு ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

இப்பொழுது வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பத்து லட்சத்திற்கும் அதிகமான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் அகற்றுவதற்கு பல வருட காலம் ஆகலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது நோர்வே, சுவிட்ஸர்லாந்து, அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த கண்ணி வெடி அகற்றும் நிபுணர்கள் இங்கு இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ-8-12)

# லண்டன் விஸாவுக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிட்டுக்காட்டும் ஒரு சதிச் செயலா? இவ்விடயம் தொடர்பாக அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிமை இல்லையா?

இப்படியான கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனார் ஜே.வி.பியின் பிரசார செயலாளரான விமல் வீரவன்ஸ எம்.பி.

இதனால், ஏற்பட்ட சர்ச்சையால் நாடாளுமன்றத்தில் அமளி துமளி ஏற்பட்டது.

நேற்றுக்காலை 10 மணிக்கு சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் நாடாளுமன்றம் கூடியது.

முதற்கட்டமாக, நாடாளுமன்ற உறுப்பினர்களால் எழுப்பப்பட்ட வாய்மூல விடைக்கான கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் அளித்தனர்.

இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகளின் கோரிக்கையின் பேரில் இலங்கை ரயில்வே திணைக்களத்தைத் தனியார்மயப்படுத்தும் திட்டம் தொடர்பான ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதம் ஆரம்பமாகும் என சபாநாயகர் அறிவித்தார்.

இதற்கேற்ப, நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளும் தளர்த்தப்பட்டிருக்கின்றன என்று சபாநாயகர் குறிப்பிட்டார்.

இச்சந்தர்ப்பத்தில், ஜே.வி.பியின் பிரசார செயலாளரான விமல் வீரவன்ஸ பிரிட்டன் விஸா தொடர்பாக விசேட உரை ஒன்றை நிகழ்த்த ஆரம்பித்தார்.

இவ்விடயம் தொடர்பாக விமல் வீரவன்ஸ சபை அமர்வுக்கு முன் சபாநாயகரிடம் அனுமதி கோரியிருந்தார். எனினும், சபாநாயகர் அதற்கான அனுமதியை வழங்க மறுத்துவிட்டார் என்பதும் சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

விமல் வீரவன்ஸ எம்.பி. சபாநாயகரின் உத்தரவையும் மீறி பேசமுற்பட்டார்.

விமல் வீரவன்ஸ அவ்வாறு பேச முடியாதென்றும், ஆசனத்தில் அமரும் படியும் சபாநாயகர் கட்டளையிட்டார். விமல் வீரவன்ஸவோ அதனை ஏற்கவில்லை.

பிரிட்டன் செல்வதற்கு விஸா வழங்கும் புதிய திட்டத்தை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் முன்னுள்ள எந்தவொரு விடயம் தொடர்பாகவும் விமர்சிக்கவோ விவாதம் நடத்தவோ முடியாதென்றார் சபாநாயகர்.

ஜே.வி.பியினரும் பொதுஜன ஐக்கிய முன்னணியினரும் இதனை ஏற்கவில்லை; எழுந்து நின்று கூச்சல் போட்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆளும் கட்சிப் பிரதம கொறடாவான அமைச்சர் மஹிந்த சமரசிங்க - நிலையியல் கட்டளையை ஆதாரம் காட்டி - விமல் வீரவன்ஸ எம்.பியை பேச அனுமதிக்கக்கூடாது என்று வாதிட்டார் .

அப்போது பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினரும் சட்டத்தரணியுமான அனுர பிரியதர்ஷன யாப்பா எதிர்வாதம் செய்தார்.

அதாவது, பிரிட்டன் செல்வதற்கான விஸா பெறுவதற்கு விண்ணப்பிக்கும் இலங்கையர்களிடம் கைவிரல் அடையாளங்கள் பெறப்படுகின்றன. இது அடிப்படை மனித உரிமை மீறல் ஆகும். இதனை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனை விசாரிப்பதா, இல்லையா? என்பதும் தீர்மானிக்கப்படவில்லை. வழக்குக்கான இலக்கமும் வழங்கப்படவில்லை. இதனால், வழக்குத்தாக்கல் செய்யப்பட்டதாகக் கருதமுடியாது. எனவே, ஜே.வி.பி. உறுப்பினர் விமல் வீரவன்ஸவைத் தொடர்ந்து பேச அனுமதிக்கவேண்டும் என்று தனது வாதத்திறமையை வெளிப்படுத்தினார் அனுர பிரியதர்ஷன யாப்பா.

ஆனால், சபாநாயகர் இவரது வாதத்தைப் பொடியாக்கிவிட்டார்.

அதாவது, மேற்படி விடயம் தொடர்பான ஆட்சேபனை மனுவொன்றை மங்கள சமரவீர எம்.பி. உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனை அவரே ஒப்புக்கொண்டுள்ளார் - என்றார் சபாநாயகர்.

ஆனால், மங்கள சமரவீர எம்.பி. இதனை மறுத்ததோடு, நான் ஆட்சேபனை மனுவொன்றை நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளேன் என்று கூறினேனே தவிர, அவ்வாறான மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்று கூறவில்லை - என்றார்.

இவ்வேளையில் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பிய அமைச்சர் மஹிந்த சமரசிங்க, நண்பர் மங்கள சற்று தடுமாற்றம் அடைந்துள்ளார். உயர் நீதிமன்றத்தின் முன் ஒருவிடயம் சமர்ப்பிக்கப்பட்டால் அவ்விடயம் நீதிமன்றத் தீர்ப்புக்கு உட்பட்டதாகின்றது. சமர்ப்பிப்பதும் தாக்கல் செய்வதும் ஒரே அர்த்தம் உடையவையே. இதன் அர்த்தம் புரியாவிட்டால் தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளட்டும். இதனடிப்படையில் சபாநாயகரின் தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறோம் என்றார் அமைச்சர் மஹிந்த.

விமல் வீரவன்ஸவோ அல்லது வேறு நபர்களோ இவ்விடயம் தொடர்பாக விமர்சிக்கமுடியாது என்றும் அவர் கூறினார்.

அப்போது நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் ஏதோ கூறமுற்பட்டார். எனினும், இவ்விடயம் தொடர்பாக ஏற்கனவே நான் தீர்ப்பு வழங்கிவிட்டேன் - என்றார் சபாநாயகர்.

ஆனாலும் சபாநாயகர் பாரபட்சமாக நடந்துகொள்கின்றார் என ஜே.வி.பியினரோடு சேர்ந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் கூச்சலிட்டனர். சபையில் ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது.

இதனால் சபாநாயகர் சபை அமர்வுகளை அரைமணிநேரத்துக்கு ஒத்திவைத்தார். காலை 10.05 மணிக்கு ஒத்திவைக்கப்பட்ட சபை மீண்டும் 10.30இற்குக் கூடியது.

மண்டும் சபை கூடியபோது சபையில் மிகவும் அமைதி காணப்பட்டது.

எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப்பட்ட ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதம் ஆரம்பமானது. மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன விவாதத்தை ஆரம்பித்துப் பேசினார்.

(ஐ-12)

## நுகேகொட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்துநின்றனர்.

கொள்ளையிட்டபின் அவர்கள் வாகனமொன்றில் தப்பிச்சென்றுள்ளனர்.

- இவ்வாறு தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் சன நடமாட்டம் உள்ள பகுதியிலேயே இத்துணிகரக் கொள்ளை இடம்பெற்றுள்ளது.

பொலீஸார் சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-8)

# கட்டாய மதமாற்றத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார். அதி விரைவில் அது அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பின் நடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

தமிழ்நாட்டில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மதமாற்ற நடவடிக்கைகளுக்கு எதிராகக் கடுமையான சட்டங்களை இயற்றி, அவற்றை நடைமுறைப்படுத்தியுள்ளார்.

இதேபோன்று, கடுமையான சட்டம் இங்கும் உருவாக்கப்படவேண்டும். அதன் மூலமே கட்டாய மதமாற்றங்களைத்தடுக்க முடியும்.

- இவ்வாறு அமைச்சர் கூறினார்.

கன்னியாஸ்திரிகளின் பயிற்சிப் பிரிவுகளையும், மடங்களையும் ஒன்றிணைக்கும் சட்ட வரைவு ஒன்று கடந்த ஜூலை 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையாக முன்வைக்கப்பட்டது.

இதனை ஆட்சேபித்து கொழும்பு-5இல் வசிக்கும் ஒருவர் உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இம்மனு கடந்த 25ஆம் திகதி உயர்நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டபோது மேற்படி சட்டவரைவு அரசமைப்புக்கு முரணானது என்றும், அதனை அங்கீகரிப்பதானால் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறவேண்டும் என்றும் அதேவேளை, சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் அங்கீகாரம் பெற வேண்டும் என்றும் தீர்ப்பளித்துள்ளனர்.

உயர்நீதிமன்றத்தின் இத்தீர்ப்பை சபாநாயகர் நேற்றுமுன்தினம் சபையில் அறிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக விளக்கம் அளிக்கும் வகையிலேயே அமைச்சர் லொக்குபண்டார செய்தியாளர் மாநாட்டை நடத்தினார்.

(ஐ)


இன்றைய புதிய வீடியோ CD வெளியீடு
★ விகடன்
★ காக்க காக்க
பிரதிகளை உடன் பெறலாம்.
நிதர்ஷன் வீடியோ
மயிலங்காடு.
(32) (21157)
T.P. -0777-178155
0777-964913

எமது புதிய வீடியோ CD வெளியீடு
சூர்யா, ஜோதிகா நடித்த
"காக்க காக்க"
CDகளும் பிரதிகளும் உடன் பெறலாம.
புதிய போஸ்ரர்கள் விற்பனைக்குண்டு.
விஸ்ணு வீடியோ
(C29346) கோண்டாவில். (32)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
சூர்யா, ஜோதிகா நடித்த
"காக்க காக்க"
வீடியோ விமல்
(32) யாழ்ப்பாணம் (21153)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
சூர்யா, ஜோதிகா நடித்த
"காக்க காக்க"
CDகளும், பிரதிகளும் உடன் பெறலாம்.
புதிய பட போஸ்ரர்கள் விற்பனைக்குண்டு.
சோலை வீடியோ
(32) நெல்லியடி. (C29345)

யாழ்.நகரில் aat பரீட்சை
aat Dec. பரீட்சை. யாழ்.நகரில் நடைபெற உள்ளதனால் 2003 Dec. இல் பரீட்சையை எடுக்க விரும்பும் மாணவர்கள் தங்கள் பதிவுகளை 12.08.2003இற்கு முன்னர் எமது நிறுவனத்தின ஊடாக மேற்கொள்ளவும். பல்கலைக்கழக, ATI மற்றும் வெளிவாரி மாணவர்களும் மிகக்குறைந்த செலவில் aat பரீட்சையை எடுப்பதற்கு நாம் வழிகாட்டுகின்றோம்.
அடிப்படைத்தகைமை: O/L 6 Passes
A/L 2 Pass
Career.com Institute
No-79 Main St - Jaffna
அலுவலக நேரம் - தினமும் 10.00 a.m. - 2.00 p.m.
(C29338) (16-17-32)

LLION AIR
லயன் ஏயர்
தினமும் காலையும் மாலையும்
பாதுகாப்பான கொழும்பு விமான பயணத்திற்கு,
GENERAL SALES AGENT
&
HANDLING AGENT,
90, KANTHAPPASEGARAM ROAD,
JAFFNA.
Tel : 021 - 222 2504, 021 - 222 2823
Fax : 021 - 222 2040
அவசர தொடர்புக்கு
HOTLINE 0777 - 382343
0722 - 401423.
(C29348) (16-17-32)

A/L 2005
கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A. (F.M.spl)
தொங்கல்
Sat, Sun - 9 - 10
ஆரம்பம்:
09.08.2003 - 9 a.m.
(21135)(12)
விக்னா
கல்வி நிறுவனம்


## மரண அறிவித்தல்

### திருமதி ஞானேஸ்வரி சுப்பையா

மலேஷியாவைப் பிறப்பிடமாகவும் குமரகோட்டம், கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி சுப்பையா அவர்கள் நேற்று புதன்கிழமை காலமானார்.

அன்னார் குமரேஷ்வரனின் அன்புத் தாயாரும் விஜியரூபினியின் அன்பு மாமியாரும் கயல்விழி, கயல்ராஜ் ஆகியோரின் பேர்த்தியும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.குமரேஷ்வரன்
(மகன்)

குமரகோட்டம்,
கோண்டாவில். (21158)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.